# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 12

02.04.2023




தன்னிறைவு பொருளாதாரத்தை நோக்கிய

10

சவால்கள்தான் என்னை வெற்றி...

14

தென்னையைத் தாக்கும் புதிய பீடை

18

## நன்னீர் மீன் வளர்ப்பு எமக்கு சாத்தியமா?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
02.04.2023



- பி.பார்த்தீபன் -

# பல துறைகளில் முதலீடுகளுக்கான திட்டங்களைத் தயாரித்துள்ளோம்


## பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதி கந்தையா கஜன்

"சர்வதேச முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்னர் இலங்கையில் முதலீடு செய்வதற்கான பின்னணியை உருவாக்க வேண்டும். அதற்கு முன்னர் இலங்கையில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை முதலில் உறுதிப்படுத்த வேண்டும்" என்று தெரிவித்த முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கைப் பிரதிநிதி கந்தையா கஜன், அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்ய வைப்பதற்கான பிரித்தானியாவுக்கான இலங்கைப் பிரதிநிதியாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சினால் தான் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகத் தெரிவித்தபோதே இந்தக் கருத்தை அவர் முன்வைத்தார். ஜனாதிபதியின் நியமனத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் அவர் விரைவில் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவிருக்கின்றார். இலங்கையில் தனது பணி தொடர்பாக அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்திருப்பவை வருமாறு -

"என்னுடைய நியமனம் இலங்கை

*முதலீட்டாளர்களைக் கொண்டுவருவது மட்டும் எங்களுடைய வேலை இல்லை. முதலீடுகளுடன் வருபவர்கள் சரியான முறையில் பயன்பெற வேண்டும். அதேபோல மக்களும் சரியான முறையில் பயன்பெறவேண்டும். இதுதான் எங்களுடைய திட்டம். இது உண்மையில் ஒரு நீண்டகாலத் திட்டம். ஒரு நாளில் முடியும் வேலை அல்ல.*



யின் பொருளாதார மீட்பின் ஒரு மிகப் பெரும் பங்காக இருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் உலக நாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர்ந்தோரை இலங்கையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு சர்வதேச நாடுகளிலுள்ளவர்களின் முதலீடுகள் மிக முக்கியமானவை. இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடியால் சர்வதேச முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்குத் தயக்கம் காட்டினர்.

தற்போது ஜனாதிபதியின் பொருளாதார மீட்புக்கான திட்டங்களால் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப் பாதையை நோக்கி பயணிக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் உலக நாடுகளிலுள்ள சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களை இலங்கையில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவே எனக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள அனைத்து சர்வதேச முதலீட்டாளர்களையும் இணைத்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கான முயற்சியை எவ்வித தடையுமின்றி முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளேன்.

சர்வதேச முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்னர் இலங்கையில் முதலீடு செய்வதற்கான பின்னணியை உருவாக்க வேண்டும். அதற்கு முன்னர் இலங்கையில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை முதலில் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருகிறோம்.

முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்குப் பாதுகாப்பான முதலீட்டுத் துறை மற்றும் திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளோம். அத்தோடு, தன்னிறைவு பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களையும் தயாரித்து வருகின்றோம். இதற்கு மேலதிகமாக, இலங்கையில் கல்வி , விவசாயம் , மீன்பிடி, தொழில்நுட்பத்துறை என பலதுறைகளில் முதலீடு செய்யும் வகையிலான திட்டங்களைத் தயாரித்துள்ளோம்.

இலங்கையில் சர்வதேச முதலீடுகள் அதிகரிக்கும்போது வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கும். இதனால், தற்போது நாட்டை விட்டு வெளியேறும் இளம் தலை முறையினருக்கு இந்த நாட்டிலேயே இருந்து வேலை செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

உதாரணமாக, கல்வித்துறையில் முதலீடுகள் அதிகரிக்கும் போது, அதிக



பட்டதாரிகளை உருவாக்குவதற்கான பல்கலைக்கழகப் புலமைப் பரிசில்களை வழங்கமுடியும். சர்வதேச பல்கலைக் கழகங்களில் படிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்பத்தி கொடுப்பதுடன், படித்தப் பின் அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களையும் நாங்களே ஏற்படுத்தியும் கொடுக்கத் திட்டங்கள் வகுத்துள்ளோம்.

தொழிற்கல்வி திட்டங்களையும் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளையும் அறிமுகம் செய்யவுள்ளோம். மேலும் தகவல் தொழில்நுட்பத்தில் Off Shore நிறுவன வசதிகளையும் , நாங்கள் அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

அனைத்துத் துறைகளிலும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக வருமானத்தை ஈட்டும் முதலீட்டு திட்டங்களையும் தயாரித்து வருகின்றோம்.

அத்தோடு, முதலீட்டாளர்களுக்கான திட்டங்களை இனங்காட்டிக் கொடுப்பதுடன், திட்ட அனுமதி, திட்ட வரைபுகளையும் பெற்றுத் தருவதற்கான ஒழுங்குகளை செய்து வருகிறோம்.

எனவே, சர்வதேச நாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் மாத்திரமன்றி சர்வதேச முதலீட்டாளர்களையும் இலங்கையில் முதலீடு செய்யுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச முதலீடுகள் இலங்கை பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதற்காக இலங்கையின் அனைத்துத் துறைகளிலும் பாதுகாப்பான, வருவாயை அதிகரிக்கக் கூடிய முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போம். இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் பலப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குச் சர்வதேச முதலீட்டாளர்கள் கைகொடுக்க வேண்டும். கைகொடுப்பார்கள் என நான் திடமாக நம்புகிறேன்.

மற்றும் இந்தப் பணிகளில் ஊடகத்துறை என்பது மிகப்பெரிய பங்களிப்பை செய்கின்றது. எமது இந்த பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க உங்களின் ஆதரவை என்றும் எதிர்பார்க்கின்றேன்.

முதலீட்டாளர்களைக்கொண்டு வருவது மட்டும் எங்களுடைய வேலை இல்லை. முதலீடுகளுடன் வருபவர்கள் சரியான முறையில் பயன்பெற வேண்டும். அதே போல மக்களும் சரியான முறையில் பயன் பெறவேண்டும். இதுதான் எங்களுடைய திட்டம். இது உண்மையில் ஒரு நீண்ட காலத் திட்டம். ஒரு நாளில் முடியும் வேலை அல்ல.

முதலீட்டாளர்களைக் கொண்டுவந்து விட்டோம். அதனுடன் எங்களுடைய வேலை முடிந்தது என்று இருந்துவிடுவதற்கு நாம் தயாராகவில்லை.

தனிநபர்களுக்கான வருமானத்தை அதிகரிப்பதற்கான இந்த திட்டத்தை நீண்ட கால அடிப்படையில் செய்வதுதான் எங்களுடைய திட்டம்.

எம்மவர்கள் எப்படியும் வந்து முதலீடுகளைச் செய்துகொண்டுதான் இருப்பார்கள். ஆனால், இதனை கொஞ்சம் மாற்றமாக கோப்பரேட் மட்டத்தில் முன்னெடுப்பதுதான் எங்களுடைய திட்டம். இதற்கான திட்டங்களை நாங்கள் உருவாக்கி வைத்திருக்கின்றோம்.

அதன்மூலம் முதலீடு செய்பவர்களை எவ்வாறான முதலீட்டை மேற்கொண்டால் எந்தளவு வருமானம் வரும், இதனை எவ்வாறு சந்தைப்படுத்தலாம், உள்நாட்டு சர்வதேச சட்டங்களின் மூலமாக இதனை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது குறித்து முதலீட்டாளர்களுக்கு நாம் தெரியப்படுத்துவோம். இதன்மூலமாக முதலீட்டாளர்களின் பாதுகாப்பை எம்மால் உறுதிப்படுத்த முடியும். பாதுகாப்பு குறித்து அச்சமடையாமல் அவர்கள் வரக்கூடிய வகையிலான சர்வதேச சட்டங்கள் குறித்தும் அவர்களுக்கு விளக்கமளிக்கின்றோம்.

நான் இந்தப் பொறுப்பை ஏற்ற இரண்டு மாதங்களில் பல முன்னேற்றங்களை அவதானிக்க முடிகின்றது.

இது எங்களுடைய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு எமக்கு கிடைத்திருக்கும் ஒரு சந்தர்ப்பம். இது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். இதில் எமது வேலை என்னவென்றால், நெறிப்படுத்தும் பணியைத்தான் நாம் செய்யப்போகின்றோம்.

இதனைவிட சமூகக்குழுக்களைப் பலப்படுத்தி கீழ் மட்டத்திலிருந்து எமது சமூகத்தை பலப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டதாகவே எமது செயற்றிட்டங்கள் அமைந்திருக்கும்.

- இவ்வாறு கஜன் கந்தையா தெரிவித்தார்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777 276 949

# கடனும் நாடும்

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்திருப்பதையிட்டு, அரச தரப்பில் மகிழ்ச்சி ஆரவாரங்களைக் காண முடிகின்றது. "கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன்" என கம்ப ராமாயணத்தில் ஒரு வசனம் வருகின்றது. கடன் பெறுபவனின் மன நிலையை வெளிப்படுத்த கம்பன் பயன்படுத்திய உவமை அது. ஆனால், இன்று கடன் கிடைத்தமைக்காக புளகாங்கிதமடையும் நிலை காணப்படுகின்றது. இன்றைய இலங்கையின் முரண்நகை நிலை இது!

ஐ.எம்.எப். கடனுதவியைச் சும்மா கொடுத்துவிடவில்லை. கடுமையான நிபந்தனைகளுடன்தான் வழங்கப்பட்டிருக்கின்றது. நிபந்தனைகளை முழுமையாக படிக்கும் யாரும் இவ்வாறு மகிழ்ச்சி ஆரவாரம் செய்யமாட்டார்கள். அவை மிகவும் கடுமையானவை. அவை நிறைவேற்றக்கூடியவையல்ல என்று பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கொரளை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கடன்பெற்றுக்கொண்டதை அரசியல் வெற்றியாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முற்படுகின்றார் என்பது இரகசியமானதல்ல. கடந்த காலங்களில் அரசியல் நோக்கத்துடன் பொருளாதாரத்தைக் கையாண்டமையும், ஊழல் மோசடிகள் நிறைந்திருந்தமையும்தான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம். மீண்டும் அதேதவறுகள் இடம்பெறக்கூடாது என்பதற்காகத்தான் சில நிபந்தனைகளை ஐ.எம்.எப். முன்வைத்திருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றுவதன் மூலமாகத்தான், அதனுடைய அடுத்த கட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனைவிட ஏனைய உதவிவழங்கும் நிறுவனங்கள், மற்றைய நாடுகளின் நம்பிக்கையையும் பெறமுடியும். நிபந்தனைகளை நிறைவேற்றும் போது, நிதி அடிப்படையிலான நெருக்கடிகள் மக்களுக்கு அதிகரிக்கும். போராட்டங்கள் தீவிரப்படுத்தப்படும். எதிர்த்தரப்பு அதனைப் பயன்படுத்தும்.

கடந்த காலங்களில் ஐ.எம்.எப். உதவியை அரசாங்கம் பெற்றுக்கொண்ட போதிலும், நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியமைக்கு இவைதான் காரணம். வரலாற்றிலிருந்து நாம் நிறைய படித்துவிட்டோம். மீண்டும் அதே தவறை இனிமேலும் செய்யப்போகின்றோமா என்பதுதான் இன்றுள்ள கேள்வி.

நிபந்தனைகளை ஓரளவுக்காவது நிறைவேற்ற வேண்டுமானால் ஊழல் மோசடிகள் இல்லாத ஒரு நிர்வாகத்தை உருவாக்க வேண்டும். அரச நிறுவனங்களைச் செயற்திறன் உள்ளதாக மாற்ற வேண்டும். அரசியல் தேவைகளுக்காக நியமனங்களை வழங்குவதை நிறுத்த வேண்டும். இது கடினமான ஒரு பணியாக இருந்தாலும், தற்போது பெற்றுக்கொண்டுள்ள கடனிலிருந்து மீள்வதற்கு இது ஒன்றுதான் வழியாக இருக்கும்!

இதற்கு உறுதியான ஸ்திரமான அரசியல் தலைமைத்துவமும் அவசியம். கலங்கிய குட்டையில் மீன்பிடிப்பவர்களாக இருக்காமல் கட்சி அரசியலை ஒதுக்கிவிட்டு செயற்பட்டால் மட்டுமே நாட்டுக்கு மீட்சி!

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## பயனுள்ள தகவல்கள்

தமிழர் பொருண்மியம் 11 ஆவது இதழ் பார்த்து மகிழ்ந்தேன். பயனுள்ள பல கட்டுரைகளை இந்த இதழிலும் தந்திருக்கின்றீர்கள்.

பொருளாதாரத்துக்கு என்றே ஒரு இதழைத் தமிழில் வெளியிடுவது மிகவும் கடினமான ஒரு பணி. ஆனால், அதனை நீங்கள் மிகவும் சிறப்பாக வெளியிடுவது எம்மைப்போன்ற பொருளாதாரத்துறை மாணவர்களுக்கு ஒரு சிறந்த வரப்பிரசாதமாக இருக்கின்றது. உங்களுடைய சமகால பொருளாதாரக் கட்டுரைகள் தரமானவையாக இருக்கின்றன.

ஐ.எம்.எப். கடன் இலங்கையை மீட்குமா என்ற தலைப்பில் கடந்த வாரம் பொருண்மியத்தில் வெளிவந்திருந்த கட்டுரை அரிய பல பயனுள்ள தகவல்களைத் தந்திருந்தது.

**சந்திரவதனா முருகேசு - கொக்குவில் கிழக்கு.**

## கால்நடைப் பண்ணைகள்

டாக்டர் கிருபானந்தகுமாரன் எழுதும் கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக எழுதும் தொடர் கட்டுரை எம்மைப்போன்ற கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ள கட்டுரை.

கால்நடைப் பண்ணை அல்லது, கோழிப்பண்ணை ஒன்றை அமைக்கும் போது எவ்வாறான தவறுகள் விடப்படுகின்றன. அவற்றை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதை அந்தக் கட்டுரைகள் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதால், அனைவருக்கும் அவை பாடமாக இருக்கின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகளவு பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலானவை தோல்வியடைந்தமைக்கான காரணங்களை அறிய முடிகின்றது. இது பண்ணைகளை வெற்றிகரமாக கொண்டுசெல்வதற்கு உதவும் பாடங்களாக அமையும்.

**சரவணன் தியாகராஜா - தேவிபுரம், புதுக்குடியிருப்பு.**

## தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

### சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------

**முகவரி** - ----------------------------------------

**தொலைபேசி இலக்கம்** - ------------------------------

**சந்தாக் காலம்** - ----------------------------------------

**செலுத்திய தொகை** - ----------------------------------

**செலுத்திய திகதி** - ----------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,65,550 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,80,500 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** இனநெருக்கடிதான் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தது என்றும் இன நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வைக்காண்பது அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்லியிருக்கின்றாரே?

**கனராஜன் தம்பையா - சுண்டிக்குளி.**

**பதில் -** ஆம். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோது ஜனாதிபதி யதார்த்தமாக இந்தக் கருத்தை முன்வைத்திருக்கின்றார். ஜனாதிபதி இதனை ஏற்றுக்கொண்டிருப்பது முக்கியமானதுதான். இதனைப் பலரும் ஏற்றுக்கொண்டாலும் கூட, அதனைப் பகிரங்கமாகச் சொல்வதற்கான துணிச்சல் அவர்களுக்கு இருப்பதில்லை.

ஜனாதிபதி அதனை வெளிப்படுத்தியிருக்கின்றார் என்பது முக்கியமானதாக இருந்தாலும், அதற்காக அவர் துணிச்சலுடன் என்ன செயயப்போகின்றார் என்ற கேள்வி முக்கியமானது. ஏற்கனவே சுதந்திர தினத்துக்கு (2023 பெப்ரவரி 04) முன்னதாகத் தீர்வைத் தரப்போவதாக கடந்த வருட இறுதியில் அவர் அறிவித்திருந்தார். ஆனால், சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பால் அதனை அவரால் முன்னெடுக்க முடியவில்லை.

இன்று மொட்டு அணி அவருக்கு ஆதரவாக இருக்கின்றது. தமிழ்க் கட்சிகளும் அவர் முன்னெடுக்கும் தீர்வு முயற்சிகளை ஆதரிக்கும். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக்காண்பதற்கு துணிச்சலுடன் சில நடவடிக்கைகளை முன்னெடுத்த ஜனாதிபதி, இதற்கான நடவடிக்கைகளையும் துணிச்சலுடன் முன்னெடுத்தால் சரித்திரத்தில் இடம்பெறுவார்.

--------------------------------------

**கேள்வி -** 35 ரூபாவுக்கு இந்திய முட்டைகளை வழங்கப்போவதாக அரசாங்கத் தரப்பில் சொல்லப்படுகின்றதே?

**மணிவண்ணன் - கிளிநொச்சி**

**பதில் -** அந்நியச் செலாவணி நெருக்கடி எதிர்கொள்ளப்படும் ஒரு காலகட்டத்தில் இவ்வாறு வெளிநாடு ஒன்றிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பது அரசாங்கத்துக்கு மட்டும்தான் தெரியும்.

உள்நாட்டில் முட்டையின் விலையேற்றத்துக்கு - கோழி உணவுகளின் விலையேற்றம்தான் காரணம் என்பது அனைவருக்கும் தெரியும். உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியமான கோழி உணவுகளுக்கு மானியத்தைக் கொடுத்திருக்கலாம்.

அதனையிட்டுச் சிந்திக்காமல் இறக்குமதி செய்வது முதலாவதாக ஒரு தவறான பொருளாதார நடவடிக்கை. இரண்டாவது அதனால் வரக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் எச்சரிக்கப்பட்டிருக்கின்றது. யாரையோ திருப்திப்படுத்துவதற்காகத் தொடர்ந்தும் தவறுகளையே அரசு செய்யப்போகின்றதா?



**உங்களுடைய கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
**tamilseconomy@gmail.com**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 130/= |
| உருளைக்கிழங்கு | - 140/= |
| பச்சைமிளகாய் | - 230/= |
| தக்காளி | - 110/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 160/= |
| கோவா | - 70/= |
| கரட் | - 180/= |
| பூசணி | - 60/= |
| புடோல் | - 120/= |
| வாழைக்காய் | - 140/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 140/= |
| பாவற்காய் | - 400/= |
| வெண்டிக்காய் | - 250/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 140/= |
| லீக்ஸ் | - 230/= |
| பீற்றூட் | - 140/= |
| கறிமிளகாய் | - 250/= |
| முருங்கைக்காய் | - 1800/= |
| போஞ்சி | - 230/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 211/= |
| கனடா டொலர் - | 232/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 343/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர்டொலர் - | 238/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 390/= |
| சுவிஸ் பிராங் - | 342/= |
| அமெரிக்க டொலர் - | 317/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 225/= |
| கனடா டொலர் - | 247/= |
| சீன யுவான் - | 49/= |
| யுரோ - | 363/= |
| ஜப்பான் யென் - | 2.5/= |
| சிங்கப்பூர் டொலர் | 248/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 412/= |
| சுவிஸ் பிராங் - | 366/= |
| அமெரிக்க டொலர் - | 335/= |

# முடிவுக்கு வரப்போகிறதா திறன்பேசிகளின் காலம்?




- நிஷா -

சமீபத்தில் உலகப் பொருளாதார மன்றத்தின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய நோக்கியா தலைமைச் செயல் அதிகாரி பெக்கா லண்ட்மார்க், புதிய தொழில்நுட்பங்களின் எழுச்சி காரணமாக அடுத்த பத்தாண்டுகளில் திறன்பேசி என்பதே யாரிடமும் இருக்காது என்று தெரிவித்தார். அவரின் கருத்து தற்போது உலகெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

2030ஆம் ஆண்டு இறுதிக்குள் 6ஜி தொழில்நுட்பம் பயன்பாட்டுக்கு வந்துவிடும் என்பதால், அதன் திறனை முற்றிலும் பயன்படுத்தும் விதமான புதிய கண்டுபிடிப்பு ஒன்று பயன்பாட்டுக்கு வரும், அது திறன்பேசிகளைவிடப் பன்மடங்கு மேம்பட்டதாக இருக்கும் என்று அவர் அப்போது தெரிவித்தார். அந்தப் புதிய கண்டுபிடிப்பு இன்னும் 10 ஆண்டுகளில் நிகழ்ந்துவிடும் அந்தக் கண்டுபிடிப்பு திறன்பேசியின் திறனையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்பதால், நமக்குத் திறன்பேசி என்கிற ஒன்றின் தேவை இல்லாமல் போய்விடும் என்பது அவருடைய கருத்து.

2030ஆம் ஆண்டுக்குள் 6ஜி சேவை வந்துவிடும் என்பதும், உலகின் பெரும்பாலான நாடுகளில் திறன்பேசி தொழில்நுட்பம் மாறிவிடும் என்றும் நோக்கியோ சி.ஈ.ஓ கூறியிருப்பது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. மனிதர்கள் அலைபேசியைக் கண்டுபிடிக்கப் பல ஆண்டுகள் ஆனது. அந்த அலைபேசியும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு வருவதற்கு அதற்குப் பின்னரும் பல ஆண்டுகள் சென்றது.

உலகில் பல நாடுகளில் 5ஜி சேவை பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. 5ஜி நெட்வொர்க்கை விரைவில் கொண்டு வர பல நாடுகள் இன்றும் முயன்று வருகின்றன. இந்தியாவில் 2ஜி, 3ஜி, 4ஜி எனப் படிப்படியாக உயர்ந்து , 5ஜி சேவை சோதனை நிலையில் இருக்கிறது. இந்தியாவில் 5ஜி வருவதற்குள் உலகின் பல நாடுகளில் 6ஜி சேவை வந்துவிடும். அதன் காரணமாக அங்கே திறன்பேசித் தொழில்நுட்பமும் இல்லாமல் போய்விடலாம் என்று தெரி



கிறது.

அந்த உரையில்,திறன்பேசிகளை விட ஸ்மார்ட் கண்ணாடிகள் போன்ற முகத்தில் அணியும் சாதனங்களே வருங்காலத்தில் மக்களின் விருப்பத் தேர்வாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்து இருந்தார். 2030க்குப் பிறகு 6ஜி தொழில்நுட்பம்

> 2030ஆம் ஆண்டுக்குள் 6ஜி சேவை வந்துவிடும் என்பதும், உலகின் பெரும்பாலான நாடுகளில் திறன்பேசி தொழில்நுட்பம் மாறிவிடும் என்றும் நோக்கியோ சி.ஈ.ஓ கூறியிருக்கின்றார். பொருளாதாரத்திலும் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

மூலம் முகத்தில் ஸ்மார்ட் கண்ணாடி உள்ளிட்ட கேட்ஜெட்களையே மக்கள் விரும்புவார்கள் என்று நோக்கியோ சி.இ.ஓ கூறியதைப் பல தொழில்நுட்ப வல்லுநர்கள் இன்று ஏற்றுக்கொண்டுள்ளனர். அப்போது உடலில் அணியக்கூடிய பொருள்கள் மட்டுமன்றி மூளையின் சிப் பொருத்தும் காலமும் விரைவில் வந்துவிடும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

மூளைக்கு அருகில் சிப் பொருத்தி அந்த சிப்பைக் கணினி மூலம் செயல்பட வைக்கலாம் என்றும், இந்த சிப் மூளையிலிருந்து வரும் சிக்னல்களைப் பதிவு செய்து தேவையான வேலைகளைச் செய்து விடும் என்றும் கூறப்படுகிறது. மூளையில் சிப் பொருத்தும் தொழில்நுட்பம் இன்று சோதனை முறையில் உள்ளது. இந்தத் தொழில்நுட்பங்கள் வருங்காலத்தில் பெரும் தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்தக்கூடும். இது பொருளாதாரத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

2030ஆம் ஆண்டுக்குள் 6ஜி தொழில்நுட்பம் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்படும் என இந்தியப் பிரதமர் தெரிவித்து இருக்கிறார். அதற்குள் என்னென்ன மாற்றங்கள் வரும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ஒருவேளை அப்போது 7ஜி தொழில்நுட்பம் வரவும் கூடும் அல்லது அலைக்கற்றை தொழில்நுட்பமே இல்லாமல் போகவும் கூடும்.

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ் தட்டச்சு தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாய பண்ணைக்கு தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்கிவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகத்தில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

வீட்டு தோட்ட விதைகள் விற்பனைக்கு உண்டு - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாக தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின்நிறைந்த கச்சான்லட்டுக்களை பெற்றுக் கொள்வதற்கு - 777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகை பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களை பெற்றுக் கொள்வதற்கு - 773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்கு தொடர்பு கொள்ளவும் - 776126448

---

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிக தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் — classified advertisement




கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1 km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வு காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம்.

தொடர்புகளுக்கு 0779789177



### தேவை

மூலிகை தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை - 0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக் கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு



### கல்வி

தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாட துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி]

தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் +94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113




# நீங்கள் எவ்வாறு வருமான வரி செலுத்துகிறீர்கள்?

**- நிஷாந்தி பிரபாகரன் -**

இலங்கையில் வருமான வரி எவ்வாறு கணக்கிடப்படுகின்றது? விளக்கம் தர முடியுமா? ஒரு இலட்சம் வருமானத்துக்கு 6% வரி என்கின்றார்கள்.

இந்தக் கணக்கு எப்படி கணக்கிடுகின்றார்கள்? ஒரு லட்சம் மாத வருமானம் பெறும் ஒருவருக்குரிய ஆண்டு வருமான வரி எவ்வளவு?

சுவிஸ்சர்லாந்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் சுமார் 10% வருமான வரியாகச் செலுத்துகின்றார்கள். அரசு, தனியார், சுய தொழில் எதுவாக இருந்தாலும் வருமானத்தில் இருந்து 10 % வரியாக அறவிடுகின்றார்கள். (உடனே அது அங்கே, இது இங்கே என கிளம்பாதீர்கள். சுவிஸர்லாந்தை விட இயற்கை தரும் பாதுகாப்புகளையும், வளங்களையும் கொண்ட தேசம் இலங்கை என்பதை கவனம் கொள்க.)

நாட்டை மீள கட்டியெழுப்பும் முயற்சியில் இருக்கும் நம் அனைவருக்கும் இருக்கும் பொறுப்பை உணரவே இதை எடுத்து காட்டுகின்றேன்.

சுவிஸில் ஒருவருக்கு அடிப்படை மாத சம்பளம் 4000 பிராங்க எனக்கொண்டால், அவருக்குரிய வருடாந்த வருமான வரி 4000 பிராங்க. இது வருமான வரிக்கு மட்டுமே. வருடாந்த செலவுக் கணக்கு, வீட்டு வாடகை, மருத்துவக் காப்புறுதி, உணவு, போக்குவரத்து, கல்வி, விடுமுறைக் கால செலவு, தொலைபேசி என எல்லாம் கணக்கிட்டும் இந்தத் தொகையை செலுத்தி ஆகணும்.

சமூக உதவிகள் பெறுவோருக்கும் நிரம்ப கட்டுப்பாடுகள் உள்ளன. அகதிகளாக வந்து சமூக உதவி பெற்று கொண்டிருந்தால் வதிவிட விசா உறுதிப்படாது. சமூக உதவி அகதிகளை விட சுவிஸ் நாட்டு குடி மக்களுக்கு கடுமையான சட்டகட்டுப்பாடுகளை கொண்டது. வருமான வரி தவிர்த்து வீட்டு வரி, குடிக்க குளிக்க பெறும் தண்ணீர் வரி சாக்கடை நீர் மழை நீருக்கு வரி, ரோட்டு வரி, வாகன வரி, குப்பை வீச வரி, நாய் வளர்க்க வரி

(ஏதேனும் மறந்திருந்தால் சொல்லுங்க) என பல வரிகள் உள்ளன.

சுவிஸில் ஒவ்வொரு தனிநபர்கள் மீதும் வருமானம் மற்றும் சொத்துக்கள் சுவிஸ்ஸுக்குள் பெறும் ஆதா ரங்களின் அடிப்படையில் வரி விதிக்கப்படுகிறார்கள்.

வருமான வரிகள் மூன்று வெவ்வேறு நிலைகளில் விதிக்கப்படுகின்றன:

1. கூட்டாட்சி மட்டத்தில் (இது சுவிஸ்சர்லாந்து முழுவதும் ஒரே மாதிரியாக உள்ளது)

2. மண்டல அளவில் (cantonal level) ஒரு குறிப்பிட்ட மண்டலத்திற்குள் ஒரே மாதிரியானது மற்றும் மண்டலத்தின் சொந்த வரிச் சட்டம் மற்றும் வரி விகிதங்களை அடிப்படையாகக் கொண்டது),

3. நகராட்சி மட்டத்தில் (நகராட்சிகள் கன்டோனல் வரிச் சட்டத்தைப் பின்பற்றுகின்றன, ஆனால் சில அளவுருக்களுக்குள் தங்கள் சொந்த வகுப்புவாத வரி விகிதத்தை அமைக்க உரிமை உண்டு).

பொதுவாக ஒரே வரி விகிதத்துடன் (அதாவது அனைத்து வருமான ஆதாரங்களும் ஒன்றாக சேர்க்கப்படும்) வருமானத்தின் அடிப்படையில் வரி விதிக்கப்படுகிறது, மேலும் அத்தகைய மொத்த வருமானத்திலிருந்து நிர்ணயிக்க பட்ட அனைத்து செலவுகளும் சேர்க்கப்பட்டு கணக்கு பார்த்து அதிலிருந்து எல்லா வரியும் வித்துத்தான் நாட்டை மேம்படுத்துகின்றார்கள்.

எடுத்துக்காட்டாக:

இரண்டு பிள்ளைகள் கொண்ட ஒரு குடும்பத்துக்கு வீடு வாடகை 1500 பிராங்குகள், மருத்துவ காப்புறுதி 1000 பிராங்குகள் கட்டாயம்.

இதில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு மருத்துவ காப்புறுதி அவர்கள் வருமானத்துக்கு ஏற்ற படி மானியம் கிடைக்கும். அவை குறித்து விரிவாக இன்னொரு பதிவில் எழுதுகின்றேன்.







AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

# தன்னிறைவு பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் பயணம்

**“நம்மிடம் இருக்கின்ற வளத்தை நாம் புறந்தள்ளி இறக்குமதியில் பாரியளவில் தங்கியிருந்தமையினால் இலங்கை உடனடியாக எதிர்பார்க்கின்ற உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்வது கடினமாகத்தான் இருக்கப்போகிறது. ஆகவே உள்ளூர் உற்பத்தியைக் கட்டி எழுப்புவதற்கு எவ்வாறான குறைபாடுகள் காணப்படுகின்றது என்பதனை முதற்கட்டமாக இனங்காணுவது அவசியமாகின்றது.”**

“தன்னிறைவுப் பொருளாதாரம்” என்றால் நாடு தனது மக்களின் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒட்டுமொத்தத் தேவையினை முழுமையாகவோ அல்லது இயலுமானவரையோ அந்நிய நாட்டின் இறக்குமதியைச் சாராது, உள்நாட்டு சுய உற்பத்தி மற்றும் சேவைகளின் வாயிலாக நிறைவு செய்யும் செயற்பாடாகும். மற்றும் பிற நாடுகளின் இறக்குமதியை நம்பாமல், தன் நுகர்வுக்குத் தேவையான அனைத்தையும் உற்பத்தி செய்வதாகும்”. இலங்கையின் சீரழிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் “தன்னிறைவுப் பொருளாதாரம்” மிகவும் அவசியமாகின்றது.

பல தசாப்தங்களுக்கு முன்பு இலங்கை தன்னிறைவடைந்த நாடாக காணப்பட்டது. சிறந்த வளமுள்ள நாடாகவும் மக்களின் தேவைகள் யாவும் உள்ளூரிலேயே நிறைவு செய்யப்பட்டதையும் வரலாறுகள் பறைசாற்றுகின்றன. ஆனால் தற்போதைய நிலைமையோ தலைகீழாக மாற்றமடைந்துள்ளது. மக்களுடைய தேவைகளில் பெரும்பாலானவை இறக்குமதியின் வாயிலாக நிறைவேற்றப்படுவதோடு உள்ளூர் உற்பத்திகள் பாரியளவில் கைவிடப்பட்ட துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை உள்ளூர் உற்பத்திகளை உதாசீனம்செய்ததன் விளைவே தற்பொழுது நாடு எதிர்கொள்கின்ற பாரிய பொருளாதார சிக்கல்கள் ஆகும். இதன் காரணமாக இலங்கை அரசாங்கம் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டெழும்பும் முகமாக சர்வதேச நாணய நிதியத்திடம் 18 ஆவது தடவையாக உதவி நாடப்பட்டது. பல நிபந்தனைகளுடனும் மற்றும் கடுமையான கட்டுப்பாடுகளுடனும் முதற்கட்ட கடன் தொகையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் முழுமையான உதவுத்தொகை நான்கு ஆண்டுகளில் தவணை அடிப்படையில் வழங்கப்படும். இலங்கை அமுல்படுத்த வேண்டிய சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்ட முக்கிய நிபந்தனைகள் பின்வரு மாறு -

* ஏப்ரல் 2023 இறுதிக்குள் கடன் மறுசீரமைப்புத்திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களுக்கு அமைவாக ஊழலுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.
* அரச வருவாயை மிக விரைவில் அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.
* அதிக வருமானம் ஈட்டுபவர்களிடமிருந்து அதிக பங்களிப்புடன் செல்வ வரி (Wealth Tax) விதித்தல் வேண்டும்.
* 2025க்குள் சொத்து மற்றும் சொத்து பரிமாற்ற வரியை அறிமுகம் செய்தல் வேண்டும்.
* 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் பண வீக்கத்தை **12%-18%** ஆகக் குறைக்க வேண்டும்.
* ஜுன் மாத இறுதிக்குள் தற்போதைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.
* நாணய மாற்று விகித நெகிழ்வுத் தன்மையைப் பராமரித்தல் வேண்டும்.
* மத்திய வங்கியை மேலும் சுதந்திரமாக்குதல் வேண்டும்.
* வலுவான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.



இந்த உதவி கிடைத்தவுடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தனது உரையில் “2026இல் உற்பத்தி பொருளாதாரத்தின் ஊடான வருமானத்தை 15 சதவீதமாக உயர்த்துவதே எமது இலக்கு” என கூறியுள்ளார். மேலும் இதற்காக “நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும், புத்தாக்கத்தை அதிகரிப்பதும் முக்கியமாகும்”, என்றும் கூறியுள்ளார். எனவே இனிவரும் காலங்களில் இலங்கை மக்களும் அரசாங்கமும் இதனை நன்குணர்ந்து உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை மீண்டும் கட்டி எழுப்புவது மிகவும் அவசியமாக அமையப்போகின்றது.

இலங்கை இயற்கையாகவே பல வளங்களைக் கொண்ட நாடாக விளங்குகிறது. ஆகவே பின்வரும் துறைகளில் தன்னிறைவு பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

**விவசாயம்:** குறிப்பாக அரிசி உற்பத்தி. அரிசி இலங்கையர்களின் பிரதான உணவாகும், மேலும் நாட்டில் நெல் சாகுபடியின் நீண்ட வரலாறு உள்ளது. தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பில் முறையான திட்டமிடல் மற்றும் முதலீட்டுடன், இலங்கை தனது அரிசி உற்பத்தியை உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் உபரிய ஏற்றுமதி செய்யவும் முடியும்.

**மீன்பிடித்துறை:** இலங்கை இந்தியப் பெருங்கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும், இது மீன்பிடிக்க ஏராளமான வாய்ப்புக்களை வழங்குகிறது. எம்நாடு பல்வேறு வகையான கடல் வளங்களைக் கொண்டுள்ளது, மேலும் நிலையான மேலாண்மை நடைமுறைகளுடன், மீன் மற்றும் கடல் உணவு உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைய முடியும்.

**கால்நடை வளர்ப்பு**

**வாசனைப் பொருட்கள்:** இலவங்கப் பட்டை (கறுவா), மிளகு, ஏலக்காய் போன்ற உயர்தர வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இலங்கை புகழ் பெற்றுள்ளது. இந்த வாசனைப் பொருட்களுக்கு உலகளாவிய ரீதியில் அதிக கேள்வி உள்ளது. மேலும் இலங்கை தனது உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது.

**சுற்றுலாத்துறை:** இலங்கையில் வளமான கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியம் உள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. சரியான உட்கட்டமைப்பு மற்றும் ஊக்குவிப்பு மூலம் நாடு அதன் சுற்றுலா வருவாயை அதிகரிக்கலாம், மற்றும் இறக்குமதியைச் சார்ந்திருப்பதை குறைக்கலாம்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்: சூரிய, காற்று மற்றும் நீர்மின்சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் வளங்களை இலங்கை கொண்டுள்ளது. இந்த வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதை இலங்கை குறைத்து ஆற்றல் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

**இரத்தினக்கல் தொழிற்றுறை.**

நம்மிடம் இருக்கின்ற வளத்தை நாம்



புறந்தள்ளி இறக்குமதியில் பாரியளவில் தங்கியிருந்தமையினால் இலங்கைக்கு உடனடியாக எதிர்பார்க்கின்ற உற்பத்தித் திறனைப் பெற்றுக் கொள்வது கடினமாகத் தான் இருக்கப்போகிறது. ஆகவே உள்ளூர் உற்பத்தியைக் கட்டி எழுப்புவதற்கு எவ்வாறான குறைபாடுகள் காணப்படுகின்றது என்பது முதற்கட்டமாக இனங்காணப்படுவது அவசியமாகின்றது. அந்த வகையில், பின்வருவனவற்றினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

**வரையறுக்கப்பட்ட விளை நிலம்:** இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட விளை நிலம் உள்ளது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் **20%** மட்டுமே சாகுபடிக்கு ஏற்றது. இது அதன் மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான உணவை உற்பத்தி செய்யும் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

**போதிய உட்கட்டமைப்பு:** நாட்டின் போக்குவரத்து, நீர்ப்பாசனம் மற்றும் சேமிப்பு வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு போதுமானதாக இல்லை. இது நாட்டின் பொருட்களைத் திறமையாக உற்பத்தி செய்வதற்கும் கொண்டு செல்வதற்கும் உள்ள திறனைக் கட்டுப்படுத்துகிறது. இது உலகச் சந்தையில் போட்டியிடுவதை கடினமாக்குகிறது.

**மூலதனத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல்:** இலங்கையில் பல சிறிய அளவிலான விவசாயிகள் மற்றும் வணிகங்களுக்கு மூலதனத்திற்கான அணுகல் இல்லை, இதனால் உற்பத்தியை அதிகரிக்கும் நவீன உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வது கடினம்.

**திறமையான தொழிலாளர் பற்றாக்குறை:** மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன விவசாய முறைகளில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை உள்ளது. இது உலகச் சந்தையில் போட்டியிடும் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நாட்டின் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

**இறக்குமதியைச் சார்ந்திருத்தல்:** உணவு, எரிபொருள் மற்றும் மூலப்பொருட்கள் உட்பட பல பொருட்களுக்கான இறக்குமதியை இலங்கை பெரிதும் நம்பியுள்ளது. இது உலக சந்தையின் ஏற்ற இறக்கங்கள் மற்றும் விலை உயர்வுகளால் நாட்டை பாதிக்கக்கூடியதாக ஆக்குகிறது. மேலும் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் திறனை கட்டுப்படுத்துகிறது.

இந்த இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்கு, உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களில் முதலீடுகள் மற்றும் தொழில்முனைவு மற்றும் மூலதனத்திற்கான அணுகலை ஊக்குவிக்கும் கொள்கைகள் உட்பட, அரசு மற்றும் தனியார் துறையின் ஒருங்கிணைந்த முயற்சி, இலகுக் கடன் வசதிகள், பாவனையில் இல்லாத நிலங்களை உள்வாங்குதல் போன்றன தேவைப்படும்.

(23ஆம் பக்கம் பார்க்க)



## எங்கள் வாழ்வும் வளமும்

# உழுந்து

- தமிழ்க்கவி -

“கறுப்பன் குளிக்கப்போனான் குளிச்சிட்டு வெளிய வெள்ளையனா வந்தானே” இது உழுந்துக்குச் சொல்லும் ஒரு நொடி. நல்ல கொழுத்த விலங்கையோ, மனிதர்களையோ சுட்டும் அடை மொழி கூட உழுத்தங்காய்தான். ‘என்னடாப்பா ஆள் உழுத்தங்காய் போல அவ்வளவு தெளிவா வாறான்’ என்றால் ஆள் கொழுத்திருக்கிறான் என்று கருத்து. உழுத்தங்காய் அவ்வளவு நெளிவு சுழிவு இல்லாமல் இருக்கும். ஒரு காயில் ஏறக்குறைய பத்து பதினொரு விதை இருக்கும்.

உழுந்து வடை இல்லாத பந்தி கிடையாது. வீட்டிலும் வாரம் தோறும் தோசை, இட்லி, உழுத்தங்களி, உழுந்தங்கஞ்சி எனவும் வேறு பலகாரங்களில் கலக்கவும் உழுந்து பயன்படும். பருமடைந்த பெண்ணுக்கும், பிள்ளைபெற்ற தாய்க்கும் கடின உழைப்பாளர்களுக்கும் உழுந்தம்மாவில் களியோ எண்ணைப்பிட்டோ செய்து கொடுப்பது வழக்கம். அதிகம் ஏன் கடைத்தெருவுக்கோ வேறெங்கோ போய்க் களைத்து விட்டால் அருகில் இருக்கும் ஒரு தேநீர்க்கடைக்குள் சென்று நாம் கேட்பது ‘ஒரு வடை ஒரு பிளேன்ரீ’. இப்போதைய நவீன சமையலறையில் தாளிதத்துக்கும் உழுத்தம் பருப்பு தேவைப்படுகிறது. உழுந்து தமிழ் மக்களின் உணவில் நீங்காத இடம் பிடித்திருக்கும் தானியம்.

எந்தக் கமக்காரனும் மாரியில் தன் நிலத்தில் ஒரு பங்கு உழுந்துச் செய்கைக்கென ஒதுக்குவான். சாதாரணமாக ஒரு வயல்பொழி உழுந்தை விதைத்துவிட்டு அதை அறுவடை செய்யும்போது முழுக் காய்களும் பழுத்தபிறகு அப்படியே கொடியோடு வலித்துக் காயவைத்து பின்னர் அதை அன்றாடம் சாணிபோட்டு மெழுகி வைத்திருக்கும் முற்றத்தில் கொண்டு வந்து போட்டு நன்றாக வெயில் எறிக்கும் நாளில் பகல் முழுவதும் விட்டு மத்தியானப் பொழுதில் அதை தடிகள் கொண்டு ஆளும் பேருமாக அடித்துத் தூளாக்கி பின்னர் கூளத்தை உதறி அள்ளி விட்டு அடியில் சிறு கூளத்துடன் வரும் உழுந்தை அப்படியே அள்ளி சாக்கில் கட்டி வைத்தால் ஆண்டு மாறினாலும் வண்டு பிடிக்காது. தேவைப்படும்போது தேவைப்படும் அளவில் எடுத்து



புடைத்து எடுப்போம்.

மற்றப்படி கூளத்துடன்தான் கட்டி வைப்போம். சிறிய அளவில் பாத்திகளாக விதைத்

“ இப்போதைய நவீன சமையலறையில் தாளிதத்துக்கும் உழுத்தம் பருப்பு தேவைப்படுகிறது. உழுந்து தமிழ் மக்களின் உணவில் நீங்காத இடம் பிடித்திருக்கும் தானியம். ”

திருந்தால் அவற்றைக் காய்களாக ஆய்ந்து சேகரித்து வைப்போம். தேவைப்படும் போது உரலில் இட்டுக் குத்தி கூளத்தை அகற்றுவோம். ஆனால் இந்த உழுந்தை ஏக்கர் கணக்கில் பயிர் செய்ய ஒருகாலம் வந்தது.

ஒவ்வொரு தடவையும் சொல்வதுதான் இறக்குமதிகள் நிறுத்தப்பட்ட ஒரு காலம். சிறிமாவோ அம்மையாரின் காலம். மரவள்ளிக்கும் நெல்லுக்கும் மட்டுமல்ல பயறு, உழுந்து, கௌபீ, சோயா போன்றவையும் எமது மண்ணில் விளைவித்தோம். இதில் என்ன ஆச்சரியம் என்றால் புதிதாக நீர்ப்பாசனம் இல்லாத மானாவாரிக் காணிகளில் ஏக்கர் கணக்கில் உழுந்தை விதைத்தார்கள். காரணம் சாதாரணமாக இரண்டரை ரூபா விற்ற உழுந்து இப்போது பத்து ரூபாவுக்கும் கிடைக்கவில்லை. எங்களிடம் இருந்த உழுந்து கொடிவகையைச்







சேர்ந்தது. ஒரு விதை முளைத்தால் ஆறு ஏழு அடி நிலப்பரப்பில் படர்ந்து கணுக்கள் தோறும் குலை குலையாகக் காய்க்கும். புரட்டாதி ஐப்பசி மாதத்தில் விதைத்தால் தை நடுப்பகுதியில் அறுவடை. நான்கு மாதமும் ஆசறுதியாகப் படர்ந்து காய்க்கும். விதை ஏக்கருக்கு நான்கு ஐந்து கிலோ போதும் விளைச்சல் சராசரியாக ஆறு ஏழு மூடைகள் வரும். உழுந்தை பெரிய சாக்கில் கட்டித் தூக்க முடியாது அது சிறிய மூடைதான். உழுந்து கனமான தானியம். நெல் கட்டும் சாக்கானால் அரை மூடைதான் கட்டலாம்.

உழுந்தை அறுவடை செய்வது எப்படி எனில், அதன் எல்லாக்காய்களும் பழுத்த பின் வேரைப்பார்த்து வெட்டி வெட்டித் திரட்டி உருட்ட வேண்டும். அப்படியே பெரிய பெரிய உருளைகளாக நிலத்தில் உருட்டி நல்ல வெய்யிலில் காயவிட வேண்டும். காயவில்லை என்றாலும் வெயில் இல்லாத பொழுதானாலும் உழுந்து விதைகள் கோதுக்குள்ளேயே நின்று விடும். சரியான மொரமொரப்பு அடங்கு முன் அதை நெரித்து எடுக்க வேண்டும். இப்போது ஏக்கர் கணக்கில் செய்கை பண்ணுவோர் அதை உழவுயந்திரம் கொண்டுதான் செய்கிறார்கள். நல்ல வெயிலில் கொடுமையான சுணையுள்ள உழுந்தை அடித்து எடுப்பது மிக மிகக் கஷ்டம். ஆனால் அந்த அரைக்கொத்தரிசித் திட்டகாலத்தில் ஓர் ஏக்கர் உழுந்து விதைத்தவர்களும் திடீர் பணக்காரராகி தமது காணிகளில் கிணறுகளையே வெட்டுமளவுக்கு வளர்ந்தார்கள்.

அது போகட்டும். இப்போது அண்மையில் உழுந்துக்கு ஏகப்பட்ட விலையேறியது. ஆனால் ஏனோ அந்த ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளின் தொடக்கத்தில் தெரிந்த அந்த மலர்ச்சி ஏற்படவில்லை. உழுந்தை ஏராளமானவர்கள் பயிரிடத்தான் செய்தார்கள். ஆனால் அவை சரியாக முளைக்கவில்லை. அல்லது முளைத்து நோய்வாய்ப்பட்டு கருகின. இடையிடையே மழையும் வந்து அழுகச் செய்தது.

உழுந்து விதையை ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு வாங்கி, அதைவிதைக்க காணியில்லாமல் காணி உள்ளவர்களிடம் ஒரு குத்தகை பேசி நிலத்தை எடுத்து விதைத்தால் உழுந்து விளைச்சலில் பாரிய நட்டம் ஏற்படும். இருப்பதைச் சந்தைக்கு கொண்டு போனால். நாநூறு ரூபா கேட்டான் முதலாளி. அவர்களில் சிலர் அடுத்த வேளைக்கு உணவு வேண்டுமே என விற்றாலும் சிலர் அதை திரும்பவும் வீட்டுக்குக் கொண்டு போனார்கள். ஏன் தெரியுமா? உழுந்து விற்றாயிற்று என்றால் நிலத்தைத் தந்தவர் குத்தகைக்கு வந்து நிற்பாரே! இதை விற்கவில்லை என்றாலாவது ஏதாவது சாக்குப் போக்கு சொல்லலாமே. அவ்வளவுதான். பனையால விழுந்தவனை மாடேறி மிதித்தது போல குறிப்பாக அதே நேரத்தில் அரசாங்கமும் இறக்குமதியைச் செய்யும். விதைத்தவன் கதி என்னவாகும்.

கொடி உழுந்து, பயிரில் எத்தனை நாள் தண்ணீர் நின்றாலும் செடி அழுகாமல் தேறி நின்றுவிட்டு மழைவிட்டதும் தன்னியல்பாக காய்க்கும். களைகள் முளைக்கு முன்பே தான் படர்ந்து களைகளை மூடி அதுவே முன்னேறி விடும் எனவே களையெடுப்பதில்லை. விளைச்சலும் அதிகம்.

ஆனால் விவசாய ஆராச்சியாளர்களால் புதிதாக எழுபதுகளில் அறிமுகம் செய்யப்பட்ட கொடி உழுந்து ஏக்கருக்கு பதினைந்து கிலோ விதைக்க வேண்டியிருந்தாலும் ஒரு செடி என்னதான் வளமான மண்ணானாலும் ஓரடி இரண்டடிக்கு வளர்ந்து அந்த அளவிலேயே காய்க்கிறது. களைகள் அதிகமாக அதன் இடைவெளிகளில் முளைக்கிறது. விரைவான வளர்ச்சியாகையால் மாரியில் விதைப்பதை மாரியிலேயே அறுவடை செய்யும் நிலை ஏற்படுகிறது. அதாவது உழுந்தை வெட்டும்காலம் மாரி முடியாத காலம் விளைந்த உழுத்தங்காய்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் மழை பெய்தால் பல்லைக்காட்டிவிடும். அதாவது தோலை நீங்கி வெள்ளையாக வெளியே தெரியும்.

எமது பாரம்பரியமான விதைகளை அழித்து செடி உழுந்து வந்தபின் கொடி உழுந்தைக் காணவில்லை. சுமார் மூன்று வருடங்களின் முன் எனது வீட்டுத் தோட்டத்தில் ஒரு கொடி உழுந்து முளைத்திருந்தது. அது ஏதோ கொத்தமல்லி விதைகளுடன் கலந்து வந்திருக்கலாம். அதை பாதுகாத்து அடுத்த வருடம் ஓர் அரைச் சுண்டு விதை விதைத்தேன். பின் அந்தக் கொடிகளிடமிருந்து அரைகிலோ விதை கிடைத்தது. போனால் போகிறது என ஒரு பெரிய தோட்டக்காரரிடம் கொடுத்தேன். அதுவும் போச்சடா அரகரா இதுவும் போச்சடா சிவ சிவா. *





உமா உற்பத்திகளின் உரிமையாளர் இம்ரான் உமா

# சவால்கள்தான் என்னை வெற்றி பாதைக்கு அழைத்துச் செல்கின்றன

“மூலதனம் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டு இருப்பதை விடுத்து இருக்கும் சிறிய சிறிய வளங்களை வைத்து முதலில் ஒரு தொழிலை ஆரம்பியுங்கள். பின்னர் அத்தொழில் உங்களுக்கு கை கொடுக்கும்”

தன்னம்பிக்கையைக் கொண்டு சாதிக்க துடிக்கும் நம் பெண்களில் முன்னுதாரண மாகத் திகழும் உமா உற்பத்திகளின் உரி மையாளர் இம்ரான் உமா மகேஸ்வரியை “தமிழர் பொருண்மியம்” வார மலரிற்கு வழங்கிய நேர்காணல்.

**கேள்வி -** மன்னார் மாவட்டத்தில் சிறந்த பெண் முயற்சியாளரான நீங்கள் இந்தத் தொழிலை முன்னெடுத்ததன் நோக்கம் என்ன?

நேர்கண்டவர் - ஞா.கவினி




**பதில் -** நாங்கள் சிறுவயதிலேயே இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து வந்தோம். இந்தியா வில் வாழ்ந்தாலும் எமது தாய் நாடு மீதான நேசம் எங்களை மீண்டும் இங்கே அழைத்து வந்தது. ஆனால் இங்கே வந்ததன் பின்பு தான் எங்களுக்கென்று இங்கு எதுவும் இல்லை என்ற உண் மையைத் தெரிந்து கொண்டோம். உண்ப தற்கும் உடுத்துவதற்கும் பிள்ளைகளது தேவைகளுக்கும் கூடப் பிறரையே தங்கி இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எதுவுமே இல்லை என்று எண்ணிய போது தான் நாங்கள் இருக்கிறோம் நீங்கள் முயற்சி செய்யுங்கள் என்று மன்னார் பிரதேச செயலகத்தின் விவாத வள நிலை யத்தினர் எங்களுக்கு கரம் கொடுத்த னர்.

விவாத வளநிலையத்தின் பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்களில் நான் இந்த உற்பத்தியை மிகச்சிறிய அளவில் ஆரம் பித்தேன்.

**கேள்வி -** சுத்திகரிப்பு உற்பத்தியை நீங்கள் ஆரம்பிக்கும்போது எதிர்கொண்ட பிரச்சினைகள் எவை?

**பதில் -** முதலாவது எனக்கு இந்த உற்பத்தியைப் பற்றிய போதிய விளக்கம் இல்லாமல் இருந்தது. இதன் மூலப் பொருட் களை பெற்றுக் கொள்வதற்கு நான் கொழும் புக்கு போக வேண்டியது தேவை, அங்கே எனக்கு மொழி பிரச்சினை. இருந்தாலும் நல்ல மனிதர்கள் சிலர் நம்மை சுற்றி

இருந்தார்கள். அவர்களது உதவியின் மூலம் மூலப் பொருட்களை நான் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி -** இந்த உற்பத்தியைச் சந்தைப் படுத்துவதில் நீங்கள் எவ்வகையான சவால்களை எதிர்கொள்கிறீர்கள்?

**பதில் -** சவால்தான் என்னை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது என்று நினைக்கிறேன். உண்மையில் ஆரம் பத்தில் மிகச் சிறிய அளவில் 2000 ரூபாவோடு ஆரம்பித்த எனது உற்பத்தி பொருட்களை அயலில் உள்ளவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக விநியோகித்தேன். ஊர் ஊராகச் சென்று எனது பொருட்களுக் கான விளம்பரத்தை நானே தேடிக் கொண் டேன். இதற்கு எனது கணவரும் எனக்கு உறுதுணையாக இருந்தார். சந்தைப்படுத் தல் என்பது ஒரு கலை அதை விரும்பி செய்தால் மிகுந்த பலனை அடையலாம்.

**கேள்வி -** இந்த வியாபாரத்தைத் தொடங் குவதற்கு உங்களுக்கு கை கொடுத்த நிறு வனங்கள் பற்றிச் சொல்லுங்கள்?

**பதில் -** உண்மையில் நான் இதனை ஆரம்பிக்கும்போது பிரதேச செயலகத்தி னூடு விதாதா வளநிலையம் எனக்கு பயிற்சி நெறிகளை வழங்கியது.

அத்தோடு அட்ரா மற்றும் கிரிசலிஸ் நிறுவனத்தின் பயிற்சி நெறிகளும் ஆலோ சனைகளும் என்னை பெரும் முயற்சி யாளராக மாற்றியவை எனலாம்.

**கேள்வி -** பல தடைகளைத் தாண்டி இந்த நிலைக்கு வந்திருக்கிறீர்கள் தற் போது உங்களுடைய உற்பத்திகளுக்கான கேள்வி எப்படி இருக்கிறது?

**பதில் -** ஆரம்பத்தில் எனது பொருட்களை மிகவும் பயத்தோடு வாங்குவதற்கு யோசித்தவர்கள் இப்போது என்து உற்பத்திகளைக் கொண்டாடுகிறார்கள். உண்மையில் எனது பொருட்களுக்கான கேள்வி இப்போது மிகவும் தாராளமாக இருக்கிறது.

இதற்காக எனக்கு உதவிய எனது புலம்பெயர் உறவுகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எனது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி -** உங்களைப் போல தொழில் முயற்சியில் ஈடுபடும் மற்றவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**பதில் -** எங்களது மண்ணில் இருக் கும் அத்தனை வளங்களையும் நாங்கள் சரியாகப் பயன்படுத்துவோமானால் யாரிலும் தங்கி இருக்காத ஓர் உன்னதமான வாழ்வை நாங்கள் வாழ முடியும்.

மூலதனம் இல்லையே என்று கவ லைப்பட்டுக் கொண்டு இருப்பதை விடுத்து இருக்கும் சிறிய சிறிய வளங்களை வைத்து முதலில் ஒரு தொழிலை ஆரம்பியுங்கள் பின்னர் அத்தொழில் உங்களுக்குக் கை கொடுக்கும்.

இன்று பல விருதுகளை வாங்கும் போது நான் நினைப்பதெல்லாம், ஒரு சிறிய கொட்டிலில் பழைய பாத்திரங்களில் 2000 ரூபாய் முதலீட்டோடு நான் ஆரம் பித்த அந்த நாட்களைத் தான். அப்போது எனக்கு ஊக்கம் அளித்தவர்களும் ஆதரவு தந்தவர்களும் எப்போதும் என் நன்றிக்கு உரியவர்கள்.




# யாழ்ப்பாணத்தின் உற்பத்திகளுக்கு சங்கிலியன் பூங்காவில் வார சந்தை

யாழ்ப்பாணம் மாவட்ட முயற்சியாளர் களின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் முகமாக மாவட்டச்செயலகத்தால் எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைகளியும் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் வாராந்த சந்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட உற்பத்திப் பொருட்களுக்கான வாரந்தச் சந்தை என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்படும் செயல்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத்துறை, கைத்தொழில் துறைசார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யமுடியும் என மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித் துள்ளார்.

இதன் ஊடாக உற்பத்தியாளர்களின் இடைத் தரகர்களுக்கான செலவீனம் குறைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் நுகர்வோர்களின் தேவைக்கேற்றவாறு உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அவர்கள் தமது பொருளாதாரத்தில் முன் னேற்றமடைவதுடன் ஏனையவர்க ளுக்கும் வேலை வாய்ப்பை வழங்க முடி யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தை பின்பற்றி பயன்பெற விரும்பும் முயற்சியாளர்கள் தமது பிரதேசச் செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும். அத்துடன் அலுவலக நேரத்தில் 021 221 3861, 077 884 2577 என்ற தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளவும்" என்றும் அரச அதிபர் அறிவித்துள் ளார்.





ஆல்ப்ஸ் தென்றல் நிஷா

# நன்னீர் மீன் வளர்ப்பு எமக்கு சாத்தியமா?

நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவித்தால் மட்டுமே தொடர்ந்தும் எமது கடல் வளங்களை அழியாமல் பாதுகாக்கலாம் என சுற்றுச்சூழல் மற்றும் எதிர்கால உணவு தேவைகள் குறித்து சொல்லப்பட்ட ஒரு கருத்துக்கான பின்னூட்டங்கள் எனக்குள் நன்னீர் மீன் வளர்ப்பு குறித்த தேடலையும் அடுத்து நாம் முன்னெடுக்கவேண்டிய திட்டங்களுக்குரிய வழிகாட்டலையும் உருவாக்கி இருக்கின்றது.

இலங்கையில் நன்னீர் மீன் வளர்ப்பு என்றதும் திலாப்பியா மீன் வளர்ப்புக்குறித்தே அதிகம் பேசப்படுகின்றது. இதனால் உள்ளூர் மீனினங்கள் அழிந்து போனது எனக் கடுமையாக எதிர்ப்பை தெரிவிக்கும் கருத்தினை இல்லை என நாம் மறுக்கவில்லை. அதற்காக மீன் வளர்ப்பே வேண்டாம், நன்னீர் மீன் வளர்ப்பே தவறு என கொள்ளலாமா?

திலாப்பியா மீன்களில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் அவசியம் புரிந்து உலகின் பல நாட்டு மக்களும் விரும்பி உண்ணும் மீனாக வளர்க்கப்படும் மீன் இனம் நம் நாட்டு மீன் இனங்களை அழித்து விட்டது என்றால் இது வரை தொடர்ந்த தவறுகளை திருத்திக் கொள்ளும்படி முயற்சிகள் தொடர வேண்டாமா?

(திலாப்பியா உட்பட நன்னீர் மீன் இனங்கள் குறித்து தனிப்பதிவில் தருகின்றேன்) கடந்த கால பிழைகளை மீண்டும் தொடராமல் இனி எப்படி சரி செய்யலாம் எனும் தெளிவு தான் இப்போது தேவைப்படுகின்றது.



இயற்கையோடிணைந்த தற்சார்பு வாழ்க்கையை குறித்த மேம்பாட்டுத் திட்டங்களை தொடரும் நாங்கள் கடலை மட்டும் அல்ல நம் நாட்டில் அனைத்து வளங்களையும் (நீர், நிலம், காற்றைக் கூட) பாதுகாக்க வேண்டும் என்பதைத் தான் கடந்த மாதங்களில் காற்றில் கலந்த மாசுக்களும் குளிருமாக பெரும் தொகையில் கால் நடைகளின் இறப்பு செய்திகள் எமக்கு எச்சரிக்கை தந்திருக்கின்றன. எங்கோ சென்னையில் உருவாகிய காற்று மாசு முழு இலங்கைக்குள்ளும் பரவிப் பாதிப்பை உருவாக்கியது போல் இயற்கைக்கு மாறான நாம் செய்யும் எல்லாமே எங்கோ என்றோ பாதிப்பை தர தான் செய்யும். அதனால் எமக்கான கடல், நில வளங்களைப் பாதுகாக்க தான் வேண்டும். காசு, பணம், துட்டு, மணி எனக் குறுகிய காலத்தில் பணம் சம்பாதிக்கும் பொருளாதார நோக்கத்தில் எல்லாவற்றையும் அணுக முடியாது.

அதே நேரம் உலகப் பொருளாதாரத்தில், மனிதர்களுக்கு உணவுப் பொருளாக மீன்வளம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். நன்னீர் மீன் வளர்ப்பைச் சரியாக நடைமுறைப்படுத்தினால் வணிக ரிதியில் மேம்பாடு அடைந்து பொருளாதாரமும் உயரும்.

மனிதன், ஆரோக்கியமாக வாழவும் இனி வரும் பஞ்ச காலங்களில் உயிர் வாழவும் உணவு வேண்டும். உலகில் கோடிக்கணக்கான மக்கள் உண்ணும் புரத சத்துள்ள முக்கிய அசைவ உணவாக மீன்உள்ளது. எனவே, கடலில்இயற்கையாக உற்பத்தியாகும் மீனை மட்டும் நம்பாமல். மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ற அதிக மீன் உற்பத்தி தேவையாய் இருக்கிறது. அதற்கான மாற்று வழியாக குட்டைகள், குளங்கள், தொட்டிகள் உருவாக்கி ( மீன் பண்ணை) எமக்குத் தேவையான் மீனினங்களை இயற்கைப் பராமரிப்பில் (நன்னீர் மீன்) ஊக்குவிக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

பத்து வருடங்களின் முன்னால் நன்னீர் மீன் வளர்ப்பில் கிழக்கு மாகாணம் முன்னணியில் இருந்தத்தாக தரவுகள் சொல்கின்றன. வடக்கில் வாழும் மக்கள் நன்னீர் மீன் இனங்கள் (ஆற்று மீன் /சேற்று மீன்)



என அதிகம் உண்பதை விரும்பாததனால் நன்னீர் மீன் வளர்ப்பை அதிகம் ஊக்குவிப்பதில்லை என்றொரு கருத்தையும் சொல்கின்றார்கள். (அப்படியா?)

### மீன் உணவு

இறைச்சி உணவுகளில் கொழுப்பு அதிகம் உள்ளது. ஆனால், மீன்களில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தப் பொருள்களும் இல்லை (சிலருக்கு ஒவ்வாமை இருக்கலாம்) "மீன் உணவு அதிக ஊட்டச்சத்துகள் நிறைந்தவை. மீனில் புரதச் சத்து மிகவும் அதிகம், மற்றும் கொழுப்பு மிகவும் குறைவு. நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கின்றவை. பொதுவாகவே மீன் உணவுகள் பார்வைத்திறனை மேம்படுத்தக் கூடியவை. இதனால் அனைத்து வயதினருக்கும் ஏற்ற ஓர் உணவாக மீன் உள்ளது. வாரத்தில் இரண்டு நாள்களாவது உணவில் மீன்களைச் சேர்த்துக்கொள்வது அதிலும் குறிப்பாக ஒமேகா-3 கொழுப்பு அமிலம் நிறைந்துள்ள மீன்களை உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது.

### ஆற்று மீன், கடல் மீன்

கடல் மீன், ஆற்று மீன், ஏரி மீன்கள் போன்றவை வளர்வது வெவ்வேறு சூழலில் உள்ள நீர் நிலைகளில்தான் என்றாலும் அவற்றில் உள்ள ஊட்டச்சத்துக்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஆற்று மீன், ஏரி மீன்கள் எல்லாம் ஆறு, குளம், ஏரிகளில் உள்ள புழு, பூச்சிகளை உணவாக உட்கொண்டு வளரும். ஆனால், கடல் மீன்கள் கடலில் வளரும் கடல்பாசிகளை உட்கொண்டு வளர்வதால் அவற்றில் ஒமேகா-3 போன்ற குறிப்பிட்ட சத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

நன்னீர் மீன் வளர்க்கும் திட்டம் உலகளவில் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டம், பிலிப்பைன்ஸில் முக்கிய பொருளாதாரம்

ஈட்டும் தொழிலாக நன்னீர் மீன் வளர்ப்பும் ஏற்றுமதியும் இருக்கின்றன.

தமிழ் நாட்டு வேளான் பல்கலைக் கழகங்களின் ( 2008 ) தரவுகளின் படி இந்தியாவில் நன்னீர் மீன்வளர்ப்பு சுமார் 13.67 கோடி ஹெக்டர் பரப்பளவில் இடம் பெறுகிறது. இதில் 2.25 கோடி ஹெக்டரில் குளங்கள் மற்றும் தொட்டிகள், 8.27 கோடி ஹெக்டர் நீர்நிலைகள் மற்றும் 3.15 கோடி ஹெக்டர் நீர்த்தேக்கங்கள் உள்ளன. இந்தியாவில் அதிகப்படியாக நன்னீர் மீன் வளம் உயர்ந்து வருகிறது.

நன்னீர் மீன் வளர்ப்பு தமிழ் நாட்டு விவசாயிகளிடையே நல்ல வருமானம் கொடுக்கும் தொழிலாக வளர்ந்து வருகிறது. காரணம், புதிதான, அன்றே பிடித்து விற்பனை செய்யும் மீன்களை வாங்க மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இதில் கட்லா, ராகு, மிர்கால் உள்ளிட்ட மீன் இனங்கள் அதிகமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டின் நன்னீர் மீன்களையும் வாங்க ஆர்வம் காட்டுகிறார்கள் மக்கள். அந்த வகையில் மீன் மற்றும் மீன் வளத்துறை நாட்டின மீன்களை வளர்ப்பவர்களுக்கு உதவும் வகையில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து வழங்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

நாட்டின மீன்வகைகளைக் காப்பாற்றவும், மக்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த மீன்களை வழங்கவும் தமிழகத்தில் உள்ள ஆறுகளில் நாட்டின மீனக் குஞ்சுகளை இருப்புச் செய்திட 2022-23ம் ஆண்டிற்குத் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்,(NFDB) ரூபாய் 1.24 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழகத்திலுள்ள 17 ஆற்றுப்படுகைகளில் நாட்டின மீன் குஞ்சுகளை இருப்புச் செய்து தமிழ்நாடு அரசு நீர் வாழ் உயிரினங்களின் சமநிலையைப் பாதுகாக்க முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதும் ஆற்றோரங்களில் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவை உற்பத்தி செய்யப்பட்டு மீன் வளத்துறை மூலம் மீன் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன

இலங்கையில் நாம் என்ன செய்து கொண்டு இருக்கின்றோம்?

ஏக்கர் கணக்கில் குளமும், ஆறும் செழிப்பான தண்ணீர் வசதியும் இருந்தால் மட்டுமே மீன் வளர்ப்பில் ஈடுபட முடியும் என்று நினைக்க வேண்டாம்.

சிறிய இடம், ஒரு செண்ட் அளவுக்கு குளமும் அதில் நிரப்பும் அளவுக்கு நீரும் கொண்ட சிறிய இடங்களிலும் மீன் வளர்க்கலாம். "

### கிணற்றில் விரால் மீன்

நாட்டு மீன்களின் உற்பத்தியை அதிகரிப்பதோடு திலப்பியா மீனை ஆற்றில் குளத்தில் விடாமல் தனித் தொட்டிகளில் வளர்க்கலாம் அல்லவா? (ஏற்கனவே பரப்பப்பட்ட மீன் இனங்களை நாம் என்ன செய்வது)

விரால் போன்ற மீன்கள் கர்ப்பிணிப் பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் தேவையான ஊட்டச்சத்துக்களைத் தருகின்றன. நம்மிடம் இருக்கும் நிலத்தின் அளவுக்கு குளம் அல்லது தொட்டியை உருவாக்கி தனி தனியே மீன்களை வளர்க்க முடியும். வெவ்வேறு மீன்கள், வயது வித்தியாசம் இருந்தால் ஒரு பெரிய மீன் சிறிய மீனை சாப்பிட்டு விடும். என்பதனால் தனி தனி தொட்டிகள் கட்டிப் பராமரிப்பது நன்மை தரும்.

ரோகு . கெழுத்தி , சிலேப்பி ,சுங்கன், பனையேறி, விரால் திலாப்பி,கட்லா இன்னும் பல இனங்கள் உண்டு.

மீன் வளர்ப்பின் நோக்கங்கள்

1.பொருளாதார வளர்ச்சி.

2.உணவு & ஊட்டச்சத்து பாதுகாப்பு.

3.வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வருவாயை உருவாக்குதல்.

4. புதிய தொழில் நுட்பங்களுக்கான சிறந்த திட்டங்கள்.

கோழி வாத்துடன் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு

கோழி, வாத்துக்களின் கழிவுகள் நேரடியாகக் குளத்திற்கு செல்வது போல் கூண்டுகள் அமைக்கப்படுகின்றன. இந்த கழிவுகளை மீன்கள் உணவாக உட்கொள்கின்றன.





ஜெ.சத்தியேந்திரன்
ஓய்வுநிலை உதவிப் பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை, யாழ்ப்பாணம்.

# தென்னையைத் தாக்கும் புதிய பீடை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்?

> “2022 ஆம் ஆண்டு குறிப்பிட்ட மாவட்டங்களில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் புதிய பீடையானது யாழ் மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பரவத் தொடங்கி தற்போது மிகவும் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது.”




தென்னைச் செய்கையாளர்களே! தென்னையினை அழிக்கப் புதியபீடை வந்துவிட்டது! அதுதான் தென்னை வெள்ளை ஈ (**coconut white fly**) அவதானமாக இருந்து அதனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுங்கள்.

இலங்கையில் தென்னைகளைத் தாக்கி, விளைச்சலைக் குறைத்து மரத்தினையே படச் செய்யும் புதிய பீடையான தென்னை வெண் ஈ (**coconutwhite fly**) பரவி வருகின்றது. இதனை உடன் கட்டுப்படுத்துங்கள். இல்லையேல் தேங்காய் உற்பத்தி பாரிய அளவில் பாதிக்கப்படும். இலங்கையில் பல வருடங்களாகத் தென்னைச் செய்கையினைப் பாதிக்கும் “மைற்” பீடையினைத் தொடர்ந்து தென்னை வெண் ஈ 2019ம் ஆண்டில் முதன் முதலாக கேகாலை மாவட்டத்தில் இனங்காணப்பட்டது. பின்பு குருநாகல், கண்டி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கும் பரவியது.

2022 ஆம் ஆண்டு குறிப்பிட்ட மாவட்டங்களில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் புதிய பீடையானது யாழ் மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டின்






பிற்பகுதியில் பரவத் தொடங்கித் தற்போது மிகவும் வேகமாகப் பரவிக் கொண் டிருக்கின்றது.

இந்த தென்னை வெண் ஈயின் பிறப் பிடம் அமெரிக்காவில் உள்ள குளோறிடா மாகாணம் ஆகும். 2016 ஆம் ஆண்டு இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள கோவை மாவட்டத்தில் தொடங்கி கேரளா வரை பரவியது. இதன் பின்பு தற்சமயம் இலங் கைக்கும் வந்துவிட்டது.

முக்கியமாக வெண் ஈ ஆனது பல இனங்களாக வகைப்படுத்தப்படும். இவை தென்னை மட்டும் அல்லாது ஏனைய பயிர்களையும் தாக்கிச் சேதத்திற்கு விளை விக்கும். ஆனால் இலங்கையில், தென் னையில் சேதத்தினை விளைவிப்பது இரு இனங்கள் என்று தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் இனங்கண்டுள்ளனர்.

### தாக்கத்தின்அறிகுறிகள்

தென்னை வெண் ஈ,தென்னோலை யின் அடிப்பகுதியில் பச்சையத்தினை உண்டு தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் நாளடைவில் தென்னோலை கருகிய தோற்றம் அளிக்கும். இதன் கழிவு தென் னோலையின் கீழ்ப் பகுதியில்விழுவத னால் கறுப்பு நிறமாகும்.

இதன் விளைவினால் கறுப்பு பங்கசுத் தாக்கமும் ஏற்படுகின்றது. தென்னோலை யின் கீழ்ப் பகுதியில் வெண் ஈ திரவத்தி னைச் சுரந்து முட்டைகளை இடுவதனால்

இரவு 7.00 மணியிலிருந்து 11.00 மணி வரை தான் தாக்கத்தின் உச்ச காலமாகும். இந் நேரத்தில் தென்னை மரத்தின் கீழ் இருந்து மின் வெளிச்சத்தி னைப் பாய்ச்சினால் மிகவும் துலக்கமாக அதன் தாக்கம் தெரியும்.

இத தாக்கத்தினால் தேங்காய் விளைச் சலில் அதிக பாதிப்பு ஏற்படும். எ தென்னை வெண் ஈ தென்னோலையின் அடிப்பகுதி யில் சுருள் சுருளாக முட்டையிட்டுபெருகும் போது பச்சைய இழப்பு ஏற்படுவதனால் உணவு உற்பத்தி (ஒளித்தொகுப்பு) பாதிக் கப்பட்டுமரம் இறப்பதற்கு சந்தர்ப்பம் உண் டாகும்.

### கட்டுப்பாட்டு முறைகள்

1. வலுத் தெளி கருவி (powersprayer) மூலம் உயர் அமுக்கத்தில் மரத்தின் கீழ்ப் பகுதியில்இருந்து மேல் நோக்கி தென்னை சிற்றோலைகளில் படத்தக்கவாறு தண் ணீரை விசிறவும். இதனால்வெண் ஈ முட்டைகள் பருவ நிலைகள் எல்லாம்டி

3. பஞ்ச கௌவியத்தினை 3லீற்றர் எடுத்து 10லீற்றர் தண்ணீரில் கலந்து விசிறலாம்.

4. வெறுமையான 1லீற்றர் தண்ணீர் போத்தலில் சிறிதளவு நெத்தலிக் கருவாட் டுத் தூளினை அதற்குள் இட்டு 1லீற்றர் தண்ணீரில் கலந்து மூடிப் பகுதிக்குக் கீழாக சிறிதளவு இடைவெளி விட்டு மூடா மல், தென்னோலை மட்டைகளில் கட்டித் தொங்கவிட வேண்டும். இது ஓர் இனக் கவர்ச்சி பொறிமுறையாகும். ஓர் ஏக்கர் தென்னந்தோட்டத்திற்கு 15 முதல் 20லீற்றர் போதுமானது.

5. தேவையற்ற காய்ந்த மட்டை களைவெட்டிவிட வேண்டும்.

6. 5அடி நீளமுள்ள மஞ்சள் பொலித் தீனை வாங்கி தென்னையினைச் சுற்றி (அடியிலிருந்து 7 அடிக்கு மேலே) கட்டி விடவும்.அதன் கீழ்ப் பகுதிக்கு கிறீஸ் பூசி விடவும்.

7. தென்னை ஆராய்ச்சி நிலையத் தினருடன் கதைத்தபோது, உயிரினவியல் கட்டுப்பாட்டுமுறை பற்றி ஆராய்ச்சி நடை பெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக் கப்பட்டது.

8. இரசாயனப் பூச்சிநாசினிகள் பாவிப் பதனை இயன்றளவு தவிர்க்கவும்.



முட்டைகள் ஓலையில் ஒட்டிக்கொள்ளும், கூடுதலாக செவ்விளநீர் கலப்பின இனங் களில் அதிகளவு தாக்கத்தினை ஏற்படுத்து கின்றது.

கீழே இருந்து தென்னையின் வட்டுப் பகுதியைப் பார்க்கும்போது, கண்ணில் தென்படத் தக்கதாக சிற்றோலைகளில் பனிப்படலம் படர்ந்து போல வெண்மை யாகத் தோற்றமளிக்கும்.

கழுவப்பட்டு தாக்கம் குறையும்.

2. தென்னை ஆராய்ச்சி நிலையத் தின் சிபாரிசின்படி, வேப்பெண்ணெய் 10 மில்லி லீற்றர், சவர்காரத்தூள் 5 கிராம், தண்ணீர் 1லீற்றர், இந்த அளவுப் பிரமா ணத்தில் மூன்றையும் கலந்து, தேவை யான அளவு மரத்திற்கேற்ப வலுத் தெளி கருவி மூலம் ஓலையின்அடிப்பகுதியில் படத்தக்கவாறு விசிறவும்.



# மாட்டுக் கொட்டகைகளின் தேவை



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

> “எமது பண்ணையாளர்கள் கால்நடைகளின் இருப்பிடத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது குறைவு. ஒரு முறையான கொட்டகை இருக்கும் போது அது கால்நடைகளை மழை வெயில் அதிக காற்றிலிருந்து அவற்றை பாதுகாக்கிறது. நோய்கள் வராமல் தடுகிறது. கள்வர்கள் ஏனைய இரை கொல்லி விலங்குகளில் இருந்து பாதுகாக்கிறது. அவற்றுக்கு உணவு வழங்குவதும் இலகு.”

சில மாதங்களுக்கு முன் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயிரக் கணக்கில் மாடுகள் அதிகரித்த குளிரால் [cold shock] இறந்திருந்தன. இது தொடர்பாக அந்த நாட்களில் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் ஊடகங்களில் வேதனையுடன் கருத்துக்களை முன் வைத்திருந்ததை அவதானித்திருப்பீர்கள். பெரும்பாலான ஊடகச்செய்திகள் பண்ணையாளர்கள் பக்கத்தில் இருந்தே அறிக்கையிடப்பட்டிருந்தன. இதனை விட அரசாங்கம் இதில் தலையிட்டு அந்த பண்ணையாளருக்கு நிவாரண உதவி வழங்கியிருக்க வேண்டும் என பண்ணையாளர்களும் ஊடகவியாளர்களும் கோரியிருந்தனர். அது தொடர்பாக அரசும் சாதக சமிக்ஜைகளை வெளியிட்டும் இருந்தது. எனது இந்த வார பதிவும் அந்த அனர்த்தம் தொடர்பானதே. ஆனால், இந்த அனர்த்தத்தை எப்படி தடுத்திருக்கலாம் என்பது பற்றியது. இறந்த பெரும்பாலான கால்நடைகள் திறந்த வெளியில் நின்றவை. [ Extensive management] அவற்றுகென்று சிறிய ரக கொட்டில்களும் இருக்கவில்லை. யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கு கிழக்கில் நூற்றுக் கணக்கில் திறந்த வெளியில் வைத்து மாடுகள் வளர்க்கப்படுகின்றன. இந்த மாடுகள் புல் வெளிகள் குளக்கரைகள் வீதி ஓரங்களில் உள்ள புற்களை உண்டு வாழ்பவை. உரிமையாளர்கள் இவற்றுக்கு பெரிதாக மினக்கடுவது கிடையாது. பெரும்பாலான நேரங்களில் மாடுகள் தாமாகவே பட்டிகளுக்கு வரும். போகும். சிலர் மாடுகளைப் பராமரிக்க ஆட்களை வைத்திருப்பார்கள். குறிப்பாக நெல் வயல் செய்யும் காலங்களில் மாடுகள் வயல்களை அத்து மீறாமல் இருக்க தூரத் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வார்கள். உதாரணமாக மன்னார் முருங்கன், மாந்தைப் பகுதியில் உள்ள மாடுகளை நாயாற்று வெளி, தேத்தாதீவு ,செட்டிக்குள பெரிய கட்டுப் பகுதிக்கும் கிளிநொச்சி கரைச்சி கண்டாவளை மாடுகளை முறிகண்டி மற்றைய கிளிநொச்சி, முல்லைத்தீவின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டு செல்வார்கள். அத்துடன் கிராமங்களில் மேய்ச்சலுக்கு இடம் இருக்கும் பகுதிகளில் உள்ள பண்ணையாளர்கள் தாமே நின்று அவற்றைப் பராமரிப்பார்கள். மற்றப்படி ஏனைய நாட்களில் மாடுகள் தாமே தம்மை பார்த்துக் கொள்ளும். பண்ணையாளர்களுக்கு பூச்சியச் செலவு [ zero expense] பால் கறப்பார்கள். எரு விற்பார்கள். கன்றுகளை விற்பார்கள். காளைகளை விற்பார்கள். வயதான மாடுகளை விற்பார்கள். இலங்கையின் மாட்டிறைச்சி தேவையின் பெரும் பகுதியை வடக்கு கிழக்கு மாகாணங்களே பூர்த்தி செய்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்குள்ள மாடுகள் குறைந்த பால் உற்பத்தியை தரக் கூடியன. இறைச்சி மற்றும் எருதான் இவற்றின் முக்கிய உற்பத்திகள். உதிரியாகத்தான் பால்.



இந்த நிலையில் இந்த மாடுகள் பெரும்பாலும் திறந்துதான் வளர்க்கப்படுகின்றன. வெயில், மழை, புயல் என சகலதையும் இவை சந்திக்க வேண்டும். குடற்புழு மருந்துகள் கொடுக்கப்படா. தடுப்பூசிகள் வழங்குவதும் குறைவு. இரவில் தண்ணீர் வழங்கப்படாது. கன்றுகளும் வயதான மாடுகளும் ஒன்றாகவே இருக்கும். எரு வியாபாரி வரும்வரை எரு அகற்றப்படாது. மாலையில் வரும் மாடுகளை இரவில் அடைப்பார்கள் மறுபடி காலையில் அவிழ்த்து விடுவார்கள். அவ்வளவுதான். நவீன கால்நடை வளர்ப்பை செய்ய சொன்னால் சிறிதும் மாற மாட்டார்கள். சின்ன சின்ன நோய்களுக்கு வைத்தியரை நாடாமல் உள்ளூர் பரிகாரிகளையும் செயற்கை முறை சினைப் படுத்துனர்களையும் கொண்டு சிகிச்சை செய்து கொள்வார்கள். அவர்கள் வெறுமனே ஓரிரு மருந்துகளை பாவித்து அந்தந்த நேர நோய் அறிகுறிகளைக் குறைப்பார்களே தவிர பண்ணை மாற்றத்தையோ முகாமைத்துவ மேம்பாட்டை பற்றியோ பண்ணையாளரிடம் சொல்ல



மாட்டார்கள். சொல்லவும் முடியாது. சிலர் தாமே பண்ணைக் கடைகளில் மருந்துகளை வாங்கிப் பாவித்தும் கொள்வார்கள். மிகப் பெரிய அனர்த்தம் அல்லது கொள்ளை நோய்கள் ஏற்படும் போது மட்டுமே கால்நடை வைத்தியரிடம் வருவார்கள்.

இந்த அதிக குளிர் அனர்த்தம் இடம் பெற்ற நாட்களை எண்ணிப் பாருங்கள். தொடர்ச்சியாக மூன்று நாட்கள் மழை பொழிந்தது. அசாதாரணமாக வளிமண்டல மாசு அதிகரித்து அதன் மூலமும் குளிரின் அளவும் கூடியிருந்தது. இதன் காரணமாக வெளியில் மழையில் தொடர்ச்சியாக நின்ற மாடுகள் குளிரைத் தாங்க முடியாமல் இறந்திருகின்றன. வடக்கின் சராசரி வெப்பநிலை $3^{0}$ பாகை செல்சியசுக்கும் அதிகம். மழை காலத்தின் கூட $2^{0}$-25 பாகை செல்சியசை விட குறையாது. கால்நடைகளும் அதற்கு பழக்கப் பட்டவை. அன்றைய அசாதாரண நாளில் 12-15 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை குறைந்திருந்தது. இதனை தாங்க முடியாத இளம் மற்றும் அதிக வயதான மாடுகள் இறந்திருந்தன. மாடுகளின் தோலின் அடியில் உள்ள கொழுப்பு படிவுகள் [fat layer] குளிர் மற்றும் அதிக வெப்பம் உடலை ஊடுருவாமல் பாதுகாக்கும் கவசமாகச் செயற்படுபவை. மேற்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியில் இந்த அனர்த்தம் நடந்த காலப் பகுதிக்கு ஒன்றரை மாதத்துக்கு முன்னரே சாதகமான மழை கிடைத்து பெரும்போக நெல் பயிர்ச்செய்கை ஆரம்பித்தபடியால் மாடுகள் பட்டிகளாக அடைக்கப்பட்டு மேய்ச்சலுக்கு பல மைல் தூரம் கொண்டு செல்லப்பட்டன. அவற்றின் உடல் உணவு பற்றாக் குறையால் மெலிந்து அதாவது அவற்றின் கொழுப்பு படலம் குறைந்த நிலையிலேயே காணப்பட்டன. மேலும் அந்த பகுதிகளில் வழமையாக ஏற்படும் தட்டைப் புழுத் தாக்கம் காரணமாக மேலும் அவை பாதிக்கப்பட்டு மெலிந்து நோய் நிலைகள் ஏற்படக்கூடிய வகையில் நலிவடைந்தும் இருந்தன. இந்த நிலையில் அதிக குளிரை தொடர்ச்சியாக எதிர்கொண்ட மேற்படி மாடுகள் பாதிக்கப்பட்டு மிகவும் பலவீனமான நிலையில் இறந்தன. குறைந்த பட்சம் ஒரு தறப்பாள் நிழலில் நனையாமல் நின்ற மாடுகள் தப்பியிருகின்றன. சில பண்ணையாளர்கள் திறந்த வெளியில் அவர்களின் மாடுகளை அடைத்து கட்டியும் வைத்திருந்த நிலையில் அந்த பகுதிக்கு வெள்ளம் வர



வும் அவை அசைய முடியாது நீரில் மூழ்கி குளிர்ந்து இறந்திருக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் மேற்கு, மற்றும் மத்திய பகுதியில் உள்ள வவுனியா மன்னார் மாவட்டங்களிலும் மாடுகளை திறந்து வளர்க்கும் முறை இருந்த போதும் அந்த வருட மழை பிந்தியதாலும் புயல்களின் தாக்கம் பெரிதாக்க இல்லாததாலும் பெரும்போகப் பயிர்ச் செய்கை பிந்தியே தொடங்கியது. இதனால் அந்த பகுதி மாடுகள் வயல்கள் குளக் கரைகளில் உள்ள புற்களை உண்டு வாழ்கின்றன. அவற்றின் தோலின் கொழுப்புப் படிவு பெரிதாகக் குறைந்திருக்கவில்லை. மற்றப்படி அங்கும் திறந்த வெளி வளர்ப்பு தான். அந்த மாடுகளும் நாட்க் கணக்கில் மழையில் நனைந்தவைதான். குடற்புழு தாக்கத்துக்கு உட்பட்டவைதான்.



எமது பண்ணையாளர்கள் கால்நடைகளின் இருப்பிடத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது குறைவு. ஒரு முறையான கொட்டகை இருக்கும் போது அது கால்நடைகளை மழை வெயில் அதிக காற்றிலிருந்து அவற்றை பாதுகாக்கிறது. நோய்கள் வராமல் தடுகிறது. கள்வர்கள் ஏனைய இரை கொல்லி விலங்குகளில் இருந்து பாதுகாக்கிறது. அவற்றுக்கு உணவு வழங்குவதும் இலகு. இளம் பராயத்து கால்நடைகளை நோய் நிலைமைகளில் இருந்து பாதுகாக்கலாம். எனது அலுவலகத்துக்கு வரும் சிறிய பண்ணையாளர் முதல் ஆயிரக் கணக்கில் மாடுகளை வைத்திருக்கும் பாரிய பண்ணையாளர்கள் வரை கேட்பது அரசாங்கம் ஏதாவது மாட்டுக் கொட்டகை திட்டம் வைத்திருக்கின்றதா? என்பது தான். அவர்கள் பெரும்பாலும் ஒழுங்கான கொட்டகைகளை வைத்திருக்கமாட்டார்கள். அவர்களிடம் உள்ள ஓரிரண்டு மாடுகளை விற்றாலோ வருடாந்தம் ஒழுங்கான கொட்டகை இல்லாததால் இறக்கும் அவர்களின் கால்நடைகளின் பெறுமதிக்கோ அவர்கள் நல்ல கொட்டகைகளை அமைத்திருக்க முடியும். எனினும் அவர்கள் இது தொடர்பாக சிந்திப்பதில்லை. இலவசமாக எதையாவது பெற்றால் தவிர தாமாக அந்த மாடுகளுக்கு ஒன்றும் செய்வதில்லை. பூச்சிய செலவு அதிக இலாபம் அவ்வளவுதான். ஊரிலுள்ள பெரும்பாலான நல்ல கொட்டகைகளை அரசாங்க அமைப்புக்களோ தனியார் நிறுவனங்களோதான் வழங்கியிருக்கும். மற்றப்படி பண்ணையாளர்கள் சுயமாக அமைத்த தரமான கொட்டகைகள் அரிது. கிராமங்களில் நூற்றுக் கணக்கில் மாடுகள் இருக்கும் கொட்டகைகள் கூட மிக தாழ்ந்த தரத்திலேயே இருக்கும்.

கால்நடைகளுக்கு கொட்டகைகள் மிக அவசியமானவை. அவையும் எங்களைப் போன்ற உயிர்தான். அவற்றுக்கு முறையான பாதுகாப்பை, வசதியை வழங்கினால் அவற்றின் உயிரிழப்புக்களை பாதிப்புகளை குறைக்க முடியும். எமக்கு அதிக உற்பத்திகளை அவற்றைக் கொண்டு பெற முடியும். அதிக வருமானத்தை பெற முடியும். கால்நடை வளர்ப்பை ஒரு வியாபாரமாக கருத வேண்டும். வருமானத்தை மட்டும் பார்க்காமல் சில முதலீடுகளையும் செய்ய வேண்டும். வியாபாரம் என்பதே உள்ளீடுகளை இட்டு வெளியீடுகளை பெறுவது தான். கொட்டகைகள் முறையான மருந்துகள் தரமான உணவுகள் என அவற்றுக்கு வழங்க அவை உங்களுக்கு அதிக உற்பத்திகளைத் திருப்பித் தரும். அவ்வளவுதான்.



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

> கிராமப்புறங்களில் வண்டில் மாடுகள் வைத்திருக்கின்ற பண்ணையாளர்கள் தற்பொழுதுவரை வைக்கோல்களை தங்களுடைய வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்து தங்களுடைய கால்நடைகளுக்கு கொடுத்து வருகின்றார்கள். ஆனால் இப்போது உள்ள பண்ணையாளர்களில் அதிகமானோர் இதனை சிரமமாக கருதி இவ்வாறு செய்வதில்லை.

# மதிப்புக் கூட்டப்பட்ட வைக்கோலும் அதனால் கிடைக்கும் பயன்களும்

உலர் தீவனத்தில் முதன்மையானதாக இருப்பதும், சுலபமாகக் கிடைப்பதும். வைக்கோல் மட்டுமே.

எமது முன்னோர்கள் தங்களுடைய கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தில் 35 வீத தீவனமாக வைகோலையும். 5 வீத தீவனமாகத் தானியங்களையும். 60 வீத தீவனமாகப் பசுந்தீவனத்தையும் கொடுத்தார்கள்.

இதனால்தான் எமது முன்னோர்களுக்கு தங்களுடைய கால்நடைகளை பராமரிப்பது சுலபமாகவும் செலவில்லாமலும் இருந்திருக்கின்றது.

ஆம் எமது முன்னோர்கள் தங்களுடைய வயல் நிலங்களில் அறுவடை முடிந்த பின்பு நன்கு திட்டமிட்டு அடுத்த போகம் அறுவடை வரும்வரைக்கும் தங்களுடைய கால்நடைகளுக்கு தேவையான அனைத்து வைக்கோல்களையும் எடுத்துக்கொண்டு தங்களுடைய மாட்டு கொட்டகைக்கு அருகில் மழை, வெயில் படாதவாறு பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தி வைத்துவிட்டு பின்பு கால்நடைகளின் தேவைக்கேற்ப கொடுத்திருக்கின்றார்கள்.

கிராமப்புறங்களில் வண்டில் மாடுகள் வைத்திருக்கின்ற பண்ணையாளர்கள் தற்பொழுது வரை வைக்கோல்களை தங்களுடைய வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்து தங்களுடைய கால்நடைகளுக்கு கொடுத்து வருகின்றார்கள்.

ஆனால் இப்போது உள்ள பண்ணையாளர்களில் அதிகமானோர் இதனை சிரமமாகக் கருதி இவ்வாறு செய்வதில்லை.

மாறாக கம்பெனிகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் அடர் தீவனங்களை அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்து தங்களுடைய கால்நடைகளின் தீவனத் தேவையை பூர்த்தி செய்கின்றார்கள்.

இவ்வாறு செய்வதனால் அவர்களுக்கு கிடைக்கும் வருமானம் காலப்போக்கில் குறைவடைந்து செல்லும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

பண்ணையாளர்கள் தங்களுடைய கால்நடைகளுக்குரிய தீவன கட்டமைப்பில் சாமர்த்தியமாகச் செயற்பட்டால் மட்டுமே தங்களுடைய பண்ணையினை இலாபத்தில் கொண்டு செல்லலாம்.

அதோடு பல கம்பெனிகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற அடர் தீவனத்தில் உலர் தீவனமான வைக்கோல், காம்பு போன்றவற்றையும் சேர்த்து தான் உற்பத்தி செய்கின்றார்கள் என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

குருநாகல், அனுராதபுரம் போன்ற பிரதேசங்களில் நெல் அறுவடை முடிந்த பின்பு அப்பிரதேசங்களில் உள்ள வைக்கோல்களில் அதிகமானவை கால்நடைகளுக்குரிய தீவனம் உற்பத்தி செய்யும் கம்பெனிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

வைக்கோலை சாதாரணமாக கொடுப்பதை விட மதிப்புக்கூட்டிக் கொடுத்தால் முழுமையான பலன் கிடைக்கும்.

என்பதோடு மாறாக எமது கால்நடைகளுக்கான தீவனச் செலவும் குறைவடையும்.

வைக்கோலின் மதிப்பைக் கூட்டுதல் சிரமமான காரியமாக ஒரு சில பண்ணையாளர்கள் கருதுகின்றார்கள்.

ஆனால் அவ்வாறு இல்லை. மிகவும் சுலபமாக அனைவராலும் உற்பத்தி செய்ய முடியும்.

அதாவது 10 கிலோ வைக்கோலை மெலிதாக நிலத்தில். மண்படாதவாறு பரப்பிய பின்பு ஒரு பாத்திரத்தில் ஒரு கிலோ கல் உப்பை, 2 லிட்டர் தண்ணீரில் கலந்து வைக்கோல்மீது கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிக்க வேண்டும்.

பின்பு மீண்டும் இன்னொரு பாத்திரத்தில் 2 லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ சீனி அல்லது சர்க்கரை கரைத்துத். பரப்பிய வைக்கோல் மீது தெளித்து லேசாக காய விட வேண்டும். சீனியை விட சர்க்கரை சிறந்ததாக இருக்கும்.

பின்பு 10 கிலோ கொள்ளளவு உள்ள பிளாஸ்டிக் பை ஒன்றினை எடுத்து அதற்குள் பரப்பிய வைக்கோல் முழுவதையும் நிரப்பிய பின்பு பிளாஸ்டிக் பையை இறுக்கமாகக் கட்டி வெயில் படாதவாறு நிழலில் 10 தொடக்கம் 12 நாட்கள் வைத்திருந்து, பிறகு தேவைக்கு ஏற்றால் போல் தங்களுடைய கால்நடைகளுக்குக் கொடுக்கலாம்.

இப்படி மதிப்புக்கூட்டப்பட்ட வைக்கோலில் கால்நடைகளுக்கு பிடித்த ஒருவித நறுமணம் வீசும். அதனால் கால்நடைகள் மிச்சம் வைக்காமல் விரும்பி சாப்பிடும்.

அதோடு கால்நடைகளுக்கு அடிக்கடி ஏற்படும் வயிற்றோட்டம் சார்ந்த பிரச்சினைகள் முற்றாக தடைப்படுவதோடு கால்நடைகளுக்குரிய மருத்துவச் செலவும் குறையும்.

மதிப்பு கூட்டப்பட்ட வைகோலுக்கு பழக்கப்பட்ட கால்நடைகள் வெகு தூரத்திற்கு வெளிமேய்ச்சலுக்கு சென்று இருந்தாலும் சரியான நேரத்திற்கு எமது வீடு தேடி



வந்துவிடுவதோடு கால்நடைகள் ஓய்வெடுத்து அசைபோடும் நேரமும் அதிகரிக்கும். வழமையை விட அதிக அளவில் நீர் குடிக்க ஆரம்பிக்கும். இதனால் கால்நடைகளின் உடல் பருமன் அதிகரிக்கும். பால் உற்பத்தியும் சற்று அதிகரிக்கும்.

மேய்ச்சல் நிலம் இல்லாத கால்நடைகளுக்கும் கோடைகாலங்களில் தீவன தட்டுப்பாடு ஏற்படும் போதும் இதுபோன்ற மதிப்பு கூட்டப்பட்ட வைக்கோல் பண்ணையாளர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆண்களின் உதவி இல்லாத பெண்களின் தலைமைத்துவத்தில் இருக்கும் குடும்பங்களில் கால்நடைகள் இருந்தால் இதுபோன்ற மதிப்பு கூட்டப்பட்ட உலர் தீவணங்களை உற்பத்தி செய்து கொடுப்பது சுலபமாகவும், லாபகரமாகவும் இருக்கும்.

வர்த்தக நோக்கத்தோடு இது போன்று. வைக்கோலை மதிப்பு கூட்டி ஏனைய பண்ணையாளர்களுக்கு விற்பனை செய்யவும் முடியும்.

குறிப்பு -

1. நன்றாக காய்ந்த பழுது இல்லாத வைகோலை மட்டும் எடுத்துக்கொண்டு மழை, வெயில் படாதவாறு களஞ்சியபடுத்தி வைத்து அதிலிருந்து எமது தேவைக்கு ஏற்றாற்போல் வைக்கோலை சிறு சிறு அளவில் எடுத்து மதிப்பு கூடிய வைக்கோலாக மாற்றி கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும்.

2. ஏனைய கால்நடைகளால் மிதிபட்ட அல்லது சாணம் பட்ட வைக்கோல்களை எடுத்து களஞ்சியப்படுத்தக் கூடாது.

3. கால்நடைகளுக்கு தேவையான மொத்த தீவனத்தில் 30 தொடக்கம் 35 வீதம் வரை மட்டுமே மதிப்புக்கூடிய உலர் தீவனத்தின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

காரணம் அதிகளவான பசுந்தீவனத்தை உண்ணும் கால்நடைகள் மட்டுமே பால் உற்பத்தியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

4. வைக்கோல் மட்டுமல்லாமல் காம்பு, சோளம், மக்காசோளம் போன்ற ஏனைய உலர் தீவனங்களையும் இது போன்று மதிப்பு கூட்டல் செய்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தலாம்.

மேலதிக ஆலோசனை தேவையெனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி - 0770239784
வாட்ஸ்ஆப் - 0769196445

# தன்னிறைவு பொருளாதாரத்தை .............

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறாக செயற்படுத்தப்படும் பொழுது தன்னிறைவு பொருளாதாரத்தின் வாயிலாக பல நன்மைகளை இலங்கை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அவற்றின் முக்கியமாக பின்வருவனவற்றினை அவதானிக்க கூடியதாக இருக்கும்.

* மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு.

இறக்குமதி பாரியளவு குறையும் அல்லது முழுமையாக இல்லாமல் போகும்.

*வெளிநாடுகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கலாம்.

* பாரியளவு அந்நிய செலாவணி வெளிப்பாய்ச்சலினை கட்டுப்படுத்தலாம்.

* நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

* ஏற்றுமதி அதிகரித்து அந்நிய செலாவணி வருமானம் அதிகரிக்கும்.

* மறைமுக ஏற்றுமதி வருமான அதிகாரிப்பு ஏற்படும்.

* இலங்கை ரூபா நாணயத்தின் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படும்.

* பணவீக்கத்தினை பாரியளவு குறைக்கக் கூடியதாக இருக்கும்.

* தனிநபர் வருமானம் அதிகரிக்கும்.

* அரசின் நேரடி மற்றும் மறைமுக வரி வருமானம் அதிகரிக்கும்.

* மேம்படுத்தப்பட்ட தேசிய பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்.

* அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையினை மாற்றி அமைக்க முடியும்.

ஆகவே, இலங்கை மக்கள் அனைவரும் இதனை நன்கு உணர்ந்து, எமது நாட்டுக்காக நாம் செய்யக்கூடிய ஒரு கடமையாக கருதி, இனிவருங்காலத்தில் நமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் முகமாக உள்ளூர் உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளினை கொள்வனவு செய்வதுடன் இயலுமானவரை இறக்குமதியினை தவிர்ப்பதன் வாயிலாக ஒரு "தன்னிறைவு பொருளாதாரம்" அடைந்த நாடாக மாற்றுவோம் என உறுதிமொழி எடுப்போம்.

எங்கட ஆச்சி முந்தி ஆம்பிளைப் பிள்ளையோ பொம்பிளைப் பிள்ளையோ மூண்டு விசயம் கட்டாயம் தெரிய வேணும் எண்டு நெடுகவும் சொல்லுவா. அந்த மூண்டு விசயமும் என்னனண்டால் சமைக்கிறது சயிக்கிள் ஓடுறது மற்றது நீந்திறது. இந்த மூண்டு விசயமும் ஓர் ஆளுக்குத் தெரிஞ்சா எவரும் எங்கையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்ற வையில தங்கி இருக்காமல் சீவிக்கலாம் எண்டுவா. அது மட்டும் இல்லை. ஒருத்தன் உந்த மூண்டையும் செய்வான் எண்டால் அவன்ரை உடம்பும் மனசும் நல்லா இருக்கும். அவனும் அவனைச் சுத்தி இருக்கிற வையும் சந்தோசமாக இருப்பினம் எண்டுவா.

எங்கட ஊரில நாங்கள் கிணத்து தண்ணியைத்தான் நம்பி இருக்கிறனாங்கள். அதிலும் மாரி காலத்தில கிணறு தளந்தட்டிக்கொண்டு நிக்கும். தண்ணி அள்ளேக்கை தப்பித்தவறி ஆரும் கிணத்துக்கை விழுந்தால் அவருக்கு நீந்தத் தெரிஞ்சாத் தப்பலாம். இல்லாட்டில் நீந்தத் தெரிஞ்சவர் ஆரும் அந்த வீட்டில இருந்தாக் குதிச்சு விழுந்த ஆளைக் காப்பாத்தலாம். இப்பிடி ஒருத்தருக்கும் நீந்தத் தெரியாட்டில் உதவி கேட்டுக் கத்திக் குழற வேணும். ஆரும் வரேல்லை எண்டால் அந்தச் சீவன் அநியாயமாப் போய்ச் சேந்திடும். சில இடங்களில நீந்தத் தெரியாட்டிலும் காப்பாத்த வேணும் எண்டு குதிச்சு அநியாயமாய்ப் போய்ச் சேர்ந்த சீவன்கள் எத்தினையோ. நீந்தத் தெரியாம ஆத்தில குளத்தில கடலில அநியாயமாப் போச்சேர்ந்த எத்தனையோ சம்பவங்களை நாங்கள் அடிக்கடி கேள்விப்படுறம். உதாலதான் எங்கட ஆச்சி நீச்சல் கட்டாயம் தெரிய வேணும் எண்டிறவ.

மற்றது சயிக்கிள் ஓட்டம் முக்கியம் எண்டிறவ. முந்தி எங்கட ஊரில இப்ப மாதிரி அடிக்கடி பஸ் ஓடுறேல்லை. கோயில் குளத்துக்கு ஆசுபத்திரிக்கு கடைகண்ணிக்கு போறதுக்கு நாங்கள் சயிக்கிள்தான் பாவிச்சனாங்கள். சயிக்கிள் இருந்தா ஓடத் தெரிஞ்சா பஸ்ஸுக்கு அதுக்கு இதுக்கெண்டு காத்துக் கொண்டு காசையும் நேரத்தையும் கரியாக்கத் தேவையில்லை எண்டு ஆச்சி சொல்லுவா. முந்தி சண்டை நடக்கேக்கை இடம்பெயர்ந்து சீவிக்கேக்கை கனபேருக்கு சயிக்கிள்தான் அவையின்ரை சீவியத்துக்கு உயிர் வாழுறதுக்கு கை குடுத்தது. முந்தி நாங்கள் யாழ்ப்பாணக் கம்பசில படிக்கேக்கை அப்ப இந்தியன் ஆமி வேலிவளியை நிண்ட காலம் நாங்கள் ஒவ்வொரு நாளும் சயிக்கிளிலைதான் போய்வாறனாங்கள். எங்கட ஊருக்கும் தின்னவேலிக்கும் போய்வரக் கிட்டத்தட்ட நாப்பது கிலோமீற்றர் வரும். வன்னியில் இருந்த காலத்தில் சயிக்கிளில் போய்வராத ஊரே கிடையாது. ஆச்சி அப்ப பேசி ஏசி எனக்குச் சயிக்கிள் ஓடப்பழக்கினதால நான் தப்பிப் பிழைச்சனான் எண்டுதான் சொல்லுவன். இப்ப நான் எங்கயும் போகச் சயிக்கிளை எடுத்தா வீட்டம்மா உங்களுக்கு என்ன விசரே ஆரும் என்ன நினைப்பினம் எண்டுவா. அவவிலையும் பிழையில்லை சயிக்கிளிலை வேலைக்குப் போனால் அங்கை இஞ்சை போனால் கவுரக்குறைச்சல் எண்டு நினைக்கிற கனபேர் இருக்கினம்.

ஆச்சி சொல்லுற மற்ற விசயம் சமையல். அதைப்பற்றி கதைக்கத்தான் வெளிக்கிட்டனான். சமை எண்டால் பக்குவப்படல் எண்டு அகராதி சொல்லுது. அதாலதான் நாங்கள் சாமத்தியப்பட்ட பிள்ளையளை பக்குவப்பட்டிட்டினம் எண்டிறனாங்கள். அப்ப சமையல் எண்டாலும் பக்குவப்படுத்தல் எண்டு அர்த்தம் எடுக்கலாம்.



# – காரைக்கவி கந்தையா பத்மானந்தன் –

# எங்கட ஆச்சி

என்னத்தை பக்குவப்படுத்திறது எண்டால் சாப்பாட்டின்ரை சுவை மணம் நிறம் சத்துக்களைப் பக்குவப்படுத்திறது எண்டு பொருள். உது கனபேருக்கு விளங்கிறேல்லை எப்பிடி எண்டான்ன அவிச்சுக் கொட்டினாச் சரி எண்டு நினைப்பினம். உதாலதான் உங்கை எத்தனையோ வீடுகளிலை சண்டை சச்சரவு வந்து அடிபட்டு ஏன் கனக்கப்போவான் நேற்று ஒரு இடத்தில கொலையிலை கூட முடிஞ்சிருக்கு எண்டு ஒரு செய்தி பாத்தனான்.

சமையல் மனிசன்ரை கூர்ப்பில முக்கியமான ஒரு விசயம் எண்டு ஆராய்ச்சி செய்தவை சொல்லுகினம். அப்ப ஒழுங்காச் சமைக்கத் தெரியாதவையை கூர்ப்படையாதவை எண்டாலாமோ எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது எனக்கு கேக்குது. உண்மையா ஒழுங்கா சமைக்கத் தெரியேல்லை எண்டால் கூர்ப்படையேல்லை எண்டுதான் சொல்ல வேணும். நெருப்பைக் கண்டு பிடிக்கேக்கையே மனுசன் சமைக்கப் பழகிப் போட்டான் எண்டு அப்பு சொல்லுறவர். இப்ப என்னனண்டால் நெருப்பில்லாமலே அவிக்காம பொரிக்காம சமைக்கிற முறையள் கனக்க வந்திட்டுது. உங்கை இப்பவும் கனபேர் ஐயோ என்ரை பிள்ளைக்கு சுடுதண்ணி கூட வைக்கத்தெரியாது எண்டு பெருமையாச் சொல்லுவினம். உப்பிடிப் பெருமை பேசுற வைக்கு நல்லா சுடுதண்ணியை கொதிக்க கொதிக்க மூஞ்சையில ஊத்தவேணும் எண்டுவா ஆச்சி பெரிய அவுறுகம் விடுவினம். உப்பிடி வீண் விசும்பு விட்டு வளத்ததுகள் தான் போற போற இடங்களில குடும்பம் நடத்தத் தெரியாம குழம்பித் தெருவில நிக்குதுகள் எண்டுவா. சிலர் நினைப்பினம் ரெக்ஸ வேயில எடுத்துச் சாப்பிடலாம் இல்லாட்டில் ஹோட்டலிலை போய்ச்சாப்பிடலாம் என்னத்துக்குச் சமைச்சுக் கஷ்ரப்பட வேணும் என்னத்துக்கு சட்டி பெட்டி கழுவ வேணும் எண்டு நினைப்பினம். உப்பிடி நினைச்சு கடைவழியை அவன் தாறதை எடுத்துத் திண்டவை அதை ஒரு நாகரிகம் எண்டு நினைச்சவை பிறகு கண்ட கிண்ட வருத்தமும் வந்து பிறகு ஒண்டுமே தின்னேலாமல் உத்தரிக்கிறதை நாங்கள் எத்தனையோ இடங்களில பாக்கிறம்.

ஆச்சி சொன்ன மாதிரி சமைக்கத் தெரிஞ்சா எங்களுக்கு விரும்பினதை விரும்பின நேரத்தில சமைச்சுச் சாப்பிடலாம். அதால செலவும் சிக்கனமாகும். உடம்பும் கண்ட கிண்ட வருத்தம் ஒண்டும் வராமல் இருக்கும். உங்கை சமைக்கத் தெரியாத ஆக்கள் லொக்டவுண் நேரத்தில எவ்வளவு கஷ்டப்படுகினம். வெளிநாடு வழியை போன எங்கட பெடியள் கனபேர் சமைக்கத் தெரிஞ்சதால தப்பிப்பிழைச்சவங்கள். பிறகு வடிவு மட்டும் பாத்துச் சமைக்கத் தெரியாத பொம்பிளையளைக் கூப்பிட்டு இப்பவும் சமைச்சுக் குடுத்து குடும்பம் நடத்திறாங்கள் எண்டு என்ரை கூட்டாளி ஒருத்தன் பகிடியாச் சொல்லுறவன். உது மாதிரி கண்டபடி எக்கச்சக்கமாச் சீதனம் குடுத்து கட்டின கன பொம்பிளையள் என்ன என்ரை அப்பன் ஆத்தை இவ்வளவு சீதன பாதனத்தை தந்தது உங்களுக்குச் சமைச்சுப் போடவே எண்டு சண்டை போடுவினம். அப்பிடியான இடங்களில சமைக்கத் தெரிஞ்ச ஆம்பிளையள் ஒரு மாதிரி சமைச்சுக் கிமைச்சு குடும்ப வண்டில மூச்சு முட்ட இழுத்து ஓடுறாங்கள். எங்கட ஒரு வெள்ளைக்காறக் கொம்பனியில வேலை செய்யிற என்ரை சிநேகிதி ஒருத்தி ஆம்பிளையளும் பொம்பிளையளும் சமமெல்லே. அப்ப சேர்ந்தெல்லோ சமைக்க வேணும். அதென்ன அடுப்பூதிறது பொம்பிளையளின்ரை வேலை எண்ட மாதிரி கன ஆம்பிளையள் நினைக்கினம் எண்டுவா. அவ சொல்லுறது உண்மை தான் அதனாலதான் ஆச்சி சொல்லுறவ ஆம்பிளையோ பொம்பிளையோ சமைக்கத் தெரிய வேணும் எண்டு. உண்மையில ஆணும் பெண்ணும் சேர்ந்து சமைச்சா அலுப்பிருக்காது எண்டிறன்.

ஆனாலும் ஒரு விசயத்தை ஒத்துக்கொள்ள வேணும். அநேகமா எங்க எந்த இடத்திலையும் எந்தக் ஹோட்டலில பாத்தாலும் சமையல்காறர் ஆம்பிளையளாத்தான் இருப்பினம். அவை சமைச்சுக் குடுக்கிறதை பெண்டுகள் சாப்பிட்டுப் போட்டு ஆஹா ஓஹோ எண்டு போட்டு தங்கட வீட்டு ஆம்பிளையளைப் பாத்து நீங்களும் இருக்கிறியளே எண்டு கருத்துச் சொல்லுவினம். அதாலதான் நல்ல சமையலை நளபாகம் ஆக்கள் எண்டு சொல்லுவினம். நளனின்ரை சமையலிலை தமயந்தி மட்டும் இல்லை நாடே கட்டுப்பட்டுக் கிடந்தது எண்டு ஆச்சி சொல்லுறவ. முந்தி நான் படிப்பிக்கிற காலத்தில பள்ளிக்கூட நிகழ்வுகளுக்கு சமைக்கேக்கை ரீச்சர்மார் கறி கூட்ட என்னைத்தான் கூப்பிடுறவை. கொஞ்சம் பொறுங்கோ... நேரம் எல்லே போகுது இன்னும் உலை வைக்காம உங்கை என்னத்தை எழுதிக்கிழிக்கிறியள் எண்டு வீட்டம்மா கத்துறா . சமைச்சு முடிய பிறகு மிச்சத்தை எழுதிறன். சோறு முக்கியம் கண்டியளோ.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2023இல் வெளியிடப்பெற்றது.